88 August
II ஆம் பிரிவு
(விஞ்ஞானம்)
ஆரம்பம்:
19-4-86 (காலை 7.30 மணி)
(விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள்)
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/=

7.30 - Physics
திரு. வர்ணம்
8.30 - Chemistry
திரு. தில்லைநாதன்
9.30 - Zoology
திரு நாகநாதன்
10.30 - Botany
திரு குகாதரன்
9.30 - 11.30-Pure & Appl. Maths
திரு. நல்லையா
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ சித்திரை மீ 6 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 9 (19-04-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:13

## கருத்துக் கலசம்

இலக்கியம் காலத்தின் கண்ணாடி எனச் சொல்லப்படுவது உண்டு. இலக்கிய சிருஷ்டிகள் பல ரகங்கள். அந்த ரகங்களில் பலவும் மன எழுச்சியின், முதிர்ச்சியின் வடிவங்கள். அவற்றில் கற்பனை சேர்ந்திருக்கும். எனினும் அவை சிருஷ்டி கால நிகழ்வுகளை அடியொற்றியவையாகவே இருக்கும்.

இலக்கியம் இறந்த கால நிகழ்வுகளைச் சொல்வது உண்டு. நிகழ்கால சம்பவங்களை சொல்வதும் உண்டு. வரும் காலத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று வழிகாட்டியாக இயம்புவதும் உண்டு.

இலக்கியத்தால் மனிதனை நல்வழிக்கு இட்டுச் செல்லவும் முடியும். தீயவழிக்கு இட்டுச் செல்லவும் முடியும்.

ஒரு சமூகத்தின் பண்பாடு, கலாசாரம் என்பனவற்றை பிரதிபலிக்கும் சக்தியும் இலக்கியத்துக்கு உண்டு.

கூட்டு மொத்தமாக பார்க்கும் இடத்து இலக்கியம் மனித வாழ்க்கையின் ஓர் அங்கம். அது அறிவு, ஞானம் ஆகியவற்றோடு கலந்தது.

ஆகையால் தான் இலக்கியத்தைப் படைப்பவன் மதிக்கப்படுகிறான்; பாராட்டப்படுகிறான்; கௌரவிக்கப்படுகிறான்.

மேலை நாடுகளில் மட்டுமன்றி, பண்டைத் தமிழ் மரபிலும் படைப்பாளிகள் — இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்கள் பாராட்டப்பட்டார்கள்; கௌரவிக்கப்பட்டார்கள். புலவர்களை புரவலர்கள் தங்கள் ஆலோசகர்களாகவும், அமைச்சர்களாகவும் வைத்திருந்தார்கள்.

ஆனால் எங்கள் யாழ்ப்பாணத்தில் இலக்கிய கர்த்தாக்கள் சரியான முறையில் மதிக்கப்படுவதில்லை; கௌரவிக்கப்படுவதும் இல்லை. அந்த வழக்கம் மிக மிகக் குறைவு. அவர்கள் வேலையற்றவர்கள், வீணர்கள் என்று கூட வர்ணிக்கப்படுவது உண்டு.

இலக்கிய கர்த்தாக்களைப் பாராட்டி அல்லது கௌரவித்து விழாக்கள் நடைபெறுவது இப்போது மட்டுமல்ல எப்போதுமே அருகிய நிலை தான்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இலக்கிய கர்த்தாக்களும், ஆர்வலர்களும் சேர்ந்து தோற்றுவித்த யாழ் இலக்கிய வட்டம் அரும்பணி ஆற்றி வருகிறது. இருபது வருடங்களுக்கு முன் அந்த அமைப்பு உருவாக்கப்பட்டு, இன்று மூன்றாவது தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கிறது.

இலக்கிய மன்றங்களை ஆரம்பிப்பது சுலபம். அவற்றை ஒரு சில வருடங்களுக்குத் தொடர்ச்சியாகக் "கொண்டு இழுப்பது" எவ்வளவு கடினம் என்பது அதில் அனுபவம் உள்ளவர்களுக்குத் தான் தெரியும்.

பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து, சில வேளைகளில் எதிர் நீச்சலடித்துத் தான் அம்

(4-ம் பக்கம் பார்க்க)

திருகோணமலை

# முதலிக்குளத்தில் நிலக்கண்ணிக்கு 8 சிப்பாய்கள் பலி!




## பொதுமகன் ஒருவரும் சம்பவத்தில் உயிரிழப்பு

— சஞ்சீவி திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, ஏப்ரல் 19

திருகோணமலை முதலிக்குளத்தில் நிலக்கண்ணி வெடித்தது. அந்தத் தாக்குதலில் 8 விமானப்படைச் சிப்பாய்கள் மரணமானார்கள்;

பொது மக்களில் ஒருவரும் மரணமடைந்தார்.

மொத்தம் 9 பேர் கொல்லப்பட்ட இச்சம்பவம் நேற்றுக் காலை 6 35 மணியளவில் முதலிக்குளம் அருகே நடைபெற்றது.

அந்த இடத்திலேயே 7 விமானப்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். பொது மகனும் அந்த இடத்திலேயே மரணமானார்.

ஒரு விமானப்படைச் சிப்பாய் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் வழியில் இறந்தார்.

3 சிப்பாய்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர்.

திருகோணமலை நகரில் இருந்து அனுராதபுரம் வீதியில் 14 ஆவது மைலில் முதலிக்குளம் உள்ளது.

இறந்த விமானப்படை கோப்ரல்களின் பெயர்கள் வருமாறு:

1. சொண்டாஜ்ஜி
2. இந்திரதாஸ
3. லக்ஷ்மண்
4. பியதாஸ

இறந்த விமானப்படை லீடர் எயர்மென்களின் பெயர்கள் வருமாறு:

1. பெரேரா ஞண்டோ
2. வீரசிங்க
3. பிரவுக்பெரீக்
4. வீரசிங்க லட்சிறி

இறந்த சிவிலியனின் பெயர் கணேவத்தை வெதமாத்தையா.

இந்த ஒன்பதுபேர்களின் மரண விசாரணைகளும் திருமலைக் கடற்படைத்தளத்தில் நேற்றுக்காலை திருகோணமலை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா முன்னிலையில் நடைபெற்றன.

### ஹெலிக்கொப்டர் சூடு!

திருகோணமலை ஏப் 19

முதலிக்குளம் நிலக்கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் ஹெலிக்கொப்டரில் சென்று தாக்குதல் நடந்த பகுதியில் சரமாரியாகச் சுட்டனர்.

இது சம்பந்தமாக மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

### நகரில் குண்டுகள்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்நகரில் நேற்று நள்ளிரவு 11 மணியளவில் அடுத்தடுத்து பலத்த சத்தங்களுடன் குண்டுகள் வெடித்தன. தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலைவரை விட்டு விட்டு குண்டுச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

கோட்டை இராணுவ முகாம் பகுதியை நோக்கி வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகளின் சத்தங்களே அவை என தெரிவிக்கப்பட்டது. மேல் விவரம் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை.

ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்டது ஒரு புரட்சி! "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" — என்று அன்று உரிமைக் குரல் எழுப்பியவர் அப்பர் சுவாமிகள்.

இன்று "நாம் யாருக்கும் குடிகளாக வாழமாட்டோம்" என்று தமிழ் மக்கள் உரிமைப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இத்தருணத்தில் அப்பர் சுவாமிகள் திருவுலா புறப்பட்டுள்ளது சாலவும் பொருத்தமானதே!

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்திலிருந்து அப்பர் பெருமானின் அழகுப் பவனி விழா ஆரம்பமாகியது தெரிந்ததே.

அமுது அடி அடைந்த அன்பரான அப்பர் பெருமானின் அழகுச் சிலை யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து கடந்த புதன்கிழமை திருக்கேதீஸ்வரம் நோக்கிப் புறப்பட்டது.

அப்பரின் அழகுச் சிலை சமய குரவரால் பாடல் பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்.

### இந்தியா கோட்டை விட்டது!

ஷார்ஜா, ஏப்ரல் 19

நேற்று நடைபெற்ற ஒஸ்ட்ரோ-ஏஸியா இறுதியாட்டத்தின் கடைசிப் பந்துவீச்சில் வெற்றிக் கிண்ணத்தை இந்தியா பாகிஸ்தானிடம் கோட்டை விட்டது.

பாகிஸ்தான் வீரர் ஜாவீட் மியண்டாட் இறுதிப்பந்தை எல்லைக் கோட்டிற்கு மேலாக— ஆறு ஓட்டங்களாக (ஸிக்ஸராக) அடித்து பாகிஸ்தான் பக்கம் வெற்றிக் கிண்ணத்தை திருப்பினார்.

ஓட்ட விபரம்:-

இந்தியா:- 245 ஓட்டங்கள் [சிறிகாந்த் 75 (8 பவுண்டரிகள், 2 ஸிக்ஸர்கள்) கவாஸ்கர் 92, வெங்சர்க்கர் 50 ஓட்டங்கள்]

(பாகிஸ்தான்:- 248 ஓட்டங்கள் (ஜாவீட் மியண்டாட் 116 ஓட்டங்கள்)

### இலக்கிய வட்டத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ் இலக்கிய வட்டத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழாவும் (இன்று) சனிக்கிழமை நல்லூர் இந்து வீதியில் நடைபெறுகின்றன.

இந்நிகழ்ச்சிகள் பிற்பகல் நடைபெறும்.

காலையில் யாழ் இலக்கிய வட்ட ஆண்டுப் பொதுக் கூட்டம் நல்லூர் இந்த வீதியில் நடைபெறும்.

## ஜி. பி, வெங்கடேஸ், பண்டாரி கொண்ட உயர் மட்டக் குழு இலங்கை யோசனையை ஆராயும்

புதுடில்லி, ஏப்ரல் 18

இலங்கையின் புதிய யோசனைகளை மூவர் கொண்ட இந்திய உயர் மட்டக்குழு பரிசிலனை செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

வெளியுறவுக் கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ.பி. வெங்கடேஸ்வரன், முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ்பண்டாரி ஆகியோர் அக்குழுவில் உள்ளனர்.

புதிய யோசனைகளை வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது பிரதமரிடம் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பித்தார்.

புதிய யோசனைகள் சம்பந்தமாக இலங்கை அரசின் சில விளக்கங்களைத் தெரிவிக்க அமைச்சர் சாஹுல் ஹமீது டில்லியில் தயாராக இருக்கிறார்.

திரு பண்டாரியை அமைச்சர் ஹமீது எந்த நேரத்திலும் சந்தித்து விளக்கங்களைக் கூறலாம் என்று தெரிகிறது.

## யாழ் நகரில் நேற்றும் ஹர்த்தால்

நல்லூர், ஏப். 19

நேற்று வெள்ளிக்கிழமையும் யாழ்நகரில் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் பூட்டப்பட்டு நகர் வெறிச்சோடிக்கிடந்தது.

கொட்டடி நகர் ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலைய முதல்வரும், இணக்க சபைத் தலைவருமான திரு செ விஜயரத்தினம் என்பவர் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து அதனைக் கண்டிக்குமுகமாக 3 வது ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

நகரில் நேற்றுக்காலை பரவலாக குண்டுகளும் வெடிக்க வைக்கப்பட்டன.

கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை.

இதற்கிடையில் திரு. விஜயரத்தினம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக அறியவந்தது.

யுத்த நிறுத்த

## கண்காணிப்புக் குழு மறு சீரமைக்கப்படும்?

கொழும்பு, ஏப். 19

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை மறுசீரமைக்க இலங்கை அரசு முயற்சிப்பதாகத் தெரிகிறது.

பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு முன்னர் பலனளிக்கக் கூடிய வகையில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் ஸ்தாபித நிலைக்கு வந்துள்ள கண்காணிப்புக் குழுவை புனரமைப்பது பற்றிய தனது எண்ணத்தை இலங்கை, இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகிறது.

### புலிகள் உரிமை

சென்னை, ஏப்ரல் 18

முதலிக்குளம் தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உரிமைகோரியிருக்கிறது. இது தொடர்பாக புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவு இன்று (வெள்ளிக்கிழமை) சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் முதலிக் குளம் என்று முன்னர் அழைக்கப்பட்ட மொறவெவ என்ற கிராமத்தில் உள்ள விமானப்படை முகாமிலிருந்து திரியாயிற்கு இன்று காலை 7 மணியளவில் விமானப்படையினர் வந்து கொண்டிருந்த சமயம் மொறவெவா சந்தியிலிருந்து கால் மைல் தூரத்தில் விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்ட கண்ணிவெடியில் ஒரு டிரக் சிக்கி முற்று சேதமடைந்ததுடன் அதில் வந்த 23 விமானப் படையினரும் பலியாகினர். எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### சுபநேரம்

19--4--1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3.02 முதல் 4.32 வரை

ராகுகாலம்:
9 02 முதல் 10.32 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமெரிக்க தாக்குதலைக் கண்டித்து

## கொழும்பிலும் ஆர்ப்பாட்டம் கொடி எரிப்பு

கொழும்பு, ஏப், 19

லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலைக் கண்டித்தும் கொழும்பிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அமெரிக்கத் தேசியக் கொடி தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

மருதானை ஜும்மா பள்ளிவாசல் முன்பாக உள்ள சாஹிரா மைதானத்தில் ஆர்ப்பாட்டமும் கொடி எரிப்பும் நடந்தன.

சுமார் 6,000 முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் சங்கங்களின் சம்மேளனம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

அமெரிக்க, இஸ்ரவேல் ஆட்சியாளரைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்து இருந்தனர்.

லிபியத் தலைவர் கேர்னல் கடாபி வாழ்க என்ற சுலோக அட்டைகளையும் அவரின் படத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

## தமிழர்களின் தலைமைத்துவம் சொந்தக் காலில் நிற்கவேண்டும்

### அதற்காக ஜே. ஆருடன் சேர்ந்து உதவுவாராம் மந்திரி தொண்டா

சென்னை, ஏப்ரல் 18

இலங்கைத் தமிழர்களின் தலைமைத்துவம் அவர்களது சொந்தக் காலில் நிற்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை உருவாக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் சேர்ந்து நானும் உதவுவேன்.

இப்படி அமைச்சர் எஸ். தொண்டமான் 'இந்து'வுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழ்த் தலைமை சொந்தக் காலில் நிற்கும் தன்மையை இழந்து விட்டது.

இந்தியாவைச் சார்ந்து நிற்கும் நிலை இலங்கைத் தமிழ்த் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

இது வரவேற்கக்கூடியது அல்ல 3,4 வருடங்கள் போய்விட்டன.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடுவது பெரும் துயரத்தை ஏற்படுத்தி உள்ளது.

தேவைப்பட்டால் ஒன்றுபட்ட தமிழ் தலைமைத்துவத்தை உருவாக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன போன்ற ஒருவருடன் சேர்ந்து உழைக்க நான் உதவி புரிவேன்.

என்னைப் பொறுத்த வரை பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் பிரச்சினையே இல்லை.

எனது தேசிய அரசுக் கொள்கையை ஏற்று அமுல் நடத்தவும் திரு. ஜெயவர்த்தன தயாராக உள்ளார்.

தமிழ் தரப்பினர் எனது யோசனைக்கு அனுகூலமாக இல்லாததினால் நான் அந்த விஷயத்தில் அக்கறை எடுக்க விரும்பவில்லை.

ஒன்றுபட்ட தமிழ்த் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு தமிழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பணத்தை சூறையாடிய ஊதாரி மனைவி இமெல்டா

## இரகசிய வாழ்க்கை அம்பலம்

சார்ள்ஸ் இளவரசனின் மாமியாராக வரும் தகுதி தனக்கு உண்டு என்று கூறியவர் இமெல்டா.

பதவியை விட்டு ஓடிய பெர்டினன்ட் மார்க்கோஸின் மனைவிதான் அவர்.

ஊதாரி மனைவி எப்படி இருப்பாள்? எப்படி அவள் வாழ்வு முடியும்? இதற்கு உதாரணம், இமெல்டாவின் வாழ்க்கை.

அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ்வீக்' இல் வெளியான தகவல்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கட்டுரை இது.

அவள், ஐந்து குழந்தைகளுக்குத்தாய் ஏழை ஒருவனுக்கு இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டிருந்தாள்.

உடைந்த கராஜ் ஒன்றே அவளின் உறைவிடம்.

ஐந்து குழந்தைகளும் அந்த கராஜிலுள்தான் அவளுடன் வசித்து வந்தன.

குழந்தைகள் தூங்கியவுடன் தாய் விசும்பி அழுவாள், தனது ஏழ்மையை எண்ணி.

ஐந்திலே ஒன்று அழகே உருவெடுத்து அழகுச்சிலையாக வளர்ந்தது.

காண்போர் மனதைச் சுண்டி இழுக்கும் கவர்ச்சிப் பெண்ணாக அவள் மாறினாள்.

அழகுராணிப் போட்டியிலே பங்கு பற்றினாள். ஊர் அறிய, உலகறியத் தொடங்கியது அவள் புகழ். அவள் தான் இமெல்டா.

1954 ஆம் ஆண்டில் ஒரு நாள் அழகுப்பெண் இமெல்டா பெர்டினன்ட் மார்க்கோஸைச் சந்தித்தாள். பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றத்தில் மார்க்கோஸின் பேச்சைக் கேட்டு மயங்கினாள் இமெல்டா.

இருவரின் சந்திப்பும் உலக சுற்றுப்பயணத்தில் இறுக்கமானது எப்படி?

உலகச் சுற்றுப்பயணத்தின் போது தனது தனிப்பட்ட வங்கி இரும்புப் பெட்டியை இமெல்டாவுக்கு திறந்து காட்டினார், மார்க்கோஸ்.

இரும்புப் பெட்டிக்குள் நிறைந்து கிடந்த அமெரிக்க ஏராளித் தாள்கள், இமெல்டாவின் உள்ளக் கதவுகளை மார்க்கோஸுக்காக அகலமாகத் திறக்க வைத்தன.

இது நடந்து, எண்ணி 11 ஆவது நாள் மார்க்கோஸ் இமெல்டா திருமணம் நிறைவேறியது.

''காதல் தான் எல்லாமும் அல்ல; பாதுகாப்பும் முக்கியம்'' — இது தான் இமெல்டாவின் சித்தாந்தம்.

32 ஆண்டுகளின் பின்னர், மார்க்கோஸுடன் இமெல்டா பிலிப்பீன்ஸை விட்டு வெளியேறினாள்.

அதன் பின்னர் இமெல்டாவின் படுக்கை அறை திறக்கப்பட்டு பார்வையிடப்பட்டது.

கண்டது என்ன?

மூவாயிரம் ஜோடி சப்பாத்துகள், பாவிக்கப்படாத குச்சி கைப்பைகள் கொண்ட ஐந்து அலுமாரிகள் விலைப்படியல் அப்படியே கழற்றப்படாமல் காணப்பட்டன. 500 பிரஸ்ஸியர்கள் (மார்புக்கச்சைகள்) ஒரு ட்ரம் நிறைந்த உள் அங்கிகள் பெரிய பெட்டிகளில் வாசனைத்திரவியங்கள்.

இவற்றைக் கண்ட வெளிநாட்டவர் ஆச்சரியப்பட்டனர்.

ஹொனலுலுவிற்குத் தப்பி ஓடிய பின்னர் ஒரு நாள்,

தனது மகள்மார், மருமகன்களுடன் திடீரென்று ஹோட்டலுக்குச் சென்றாள், இமெல்டா. இரண்டு, மூன்று வகைப் பானங்களுக்கு ஆடர் கொடுத்தாள்.

பானங்கள் வந்தவுடன் எல்லாவற்றையும் ஒருகண்ணாடி தம்ளரினுள் ஊற்றினாள் ஹோட்டல் மனேஜர் திடுக்கிட்டார்.

பில்லுக்கான பணம் மகளினால் கொடுக்கப்பட்டது. இமெல்டா நேராக கணவனின் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

பதவியின் உச்சக்கட்டத்தில் இமெல்டா எப்படி நடந்து கொண்டாள் என்பதை அறிய வேண்டாமா?

ஒரு நாள் நியூயோர்க்கில் உள்ள வால்டோர்ப் டவர்ஸ் ஹோட்டலில் தங்கினாள்.

நூறு டாலர் நோட்டுக்களாக ஹோட்டல் பையன்களுக்கு டிப்ஸ் கொடுத்தாள் ஒரு காவலாளனுக்கு காரிட்டியர் கைக்கடிகாரம் ஒன்றையே பரிசளித்தாள்.

உச்சக்கட்ட வாழ்வின் போது, சார்ள்ஸ் இளவரசனின் மாமியாராக வரும் தகுதி தனக்கு உண்டு என்று நினைத்துக் கொண்டவள் தான் இமெல்டா. இப்போது வறுமை நோயினால் பீடிக்கப்பட்டவள் என்று நண்பர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறாள்.

தாழ்வு மனப்பான்மையால் பீடிக்கப்பட்டவர் இமெல்டா.

மார்க்கோஸ் - இமெல்டா தம்பதிகளின் சுமார் 1,500 நிதிசம்பந்தமான தஸ்தாவேஜுகளை விசாரணையாளர்களிடம் சமர்ப்பிக்க றேகன் நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

மறைத்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றி பரபரப்பான தகவல்கள் அப்போது வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையில் பிலிப்பீன்ஸின் புதிய கொரேசென் அரசு, மார்க்கோஸின் சொத்துக்களை தடுத்து வைத்துஉள்ளது.

மார்க்கோஸின் பெயரில் இருந்த 80 கோடி அமெரிக்க டாலர் சுவிஸ் இரகசிய வங்கிக் கணக்கு ஒன்றை கண்டுபிடித்துள்ளதாகவும் பிலிப்பீன்ஸின் புதிய அரசு அறிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி றேகன் உபஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் உட்பட பல அரசியல்வாதிகளுக்கு சுமார் 7 கோடி அமெரிக்க டாலர்களை வழங்க மார்க்கோஸ் திட்டமிட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

ஒரு தடவை அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் கடை ஒன்றுக்குள் இமெல்டா நுழைந்தாள். டசின் கணக்கில் துணிமணிகளை வாங்கினாள். பணத்தை, சரசரக்கும் புத்தம் புது அமெரிக்க டாலர் நோட்டுக்களாக வழங்கினாள் இமெல்டா. ஒவ்வொரு டாலர் நோட்டும் பணிப்பெண்ணினால் ஸ்திரிக்கை (அயர்ன்) பண்ணப்பட்டு இருந்ததாம்.

விசுவாசமில்லாமல் நடந்ததற்காக இமெல்டா, மார்க்கோஸை தண்டிக்கவும் தவறவும் இல்லை.

1970 இல் ஹொலிவூட் நடிகை ஒருத்தி, மார்க்கோஸுடனான இரகசியத் தொடர்பு பற்றி வெளியிட்டாள்.

உல்லாசமாக இருந்த சமயம் மார்க்கோஸ் பேசிய காதல் மொழிகளைப் பதிவு செய்த ஒலிப்பதிவு நாடாவை அந்த நடிகை வெளியிட்டாள்.

மார்க்கோஸ் இதற்காக இமெல்டாவிடம் நன்றாக மாட்டிக் கொண்டார்.

இதனால் மனைவியை மார்க்கோஸ் 'வாங்க' வேண்டியதாயிற்று

எப்படி? உலகத் தலை (7 ஆம் பக்கம் பார்க்க)

- தீபன்ராஜா -

# மாணவனைத் தவறுதலாக தண்டித்துவிட்டு அவனிடமே மன்னிப்புக் கேட்டதை மறக்கலாமோ...!

## 'ஒறேற்றருடன்' ஒரு பேட்டி



ரிஷிகளுக்கு இறந்த காலம் இருப்பதுபோல பாவிகளுக்கு எதிர்காலம் உண்டு.

பாவிகளுக்கு அந்த நம்பிக்கையை ஊட்டி ஈடேற்ற வேண்டிய கடப்பாடு சமூகத்துக்கு உண்டு.

வாழ்க்கையில் சகல துறைகளுக்கும் பொருந்தும் இக்கோட்பாடு கல்வித்துறைக்கும் வழிகாட்ட வேண்டும்.

கல்வியில் சிறந்த மாணவர்களையும் கட்டுப்பாடு, ஒழுக்கம் தவறாத 'சாது'க்களையும் மட்டும் தெரிவு செய்து பாடசாலைகள் அனுமதி வழங்கினால் ஏனைய மாணவர்கள் தலைவிதி என்னவது?




நான் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் படிப்பில் குறைவானவர்கள், கட்டுப்பாடு இல்லாதவர்கள் என்று ஏனைய பாடசாலைகள் நிராகரித்த மாணவர்களை அனுமதித்தேன். அவர்கள் திறம்பட ஒழுகி, நன்கு கற்று இன்று சமூகத்தின் பல மட்டங்களிலும் சிறந்து விளங்கக் கண்டு மகிழ்கிறேன்.

காலை வேளையில் தனது வீட்டில் சஞ்சீவியுடனான பேட்டியை ஆரம்பிக்கும் போதே 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் மேற்கண்டவாறு சாதாரணர்களின் நலன் பற்றி வலியுறுத்தினார்.

இன்முகத்துடன் நகைச்சுவை இழையோட கலந்துரையாடும் இயல்பு எண்பத்து நாலு வயதிலும் அவரிடம் இருக்கக் காண்கிறோம்.

### ஒறேற்றர்

'ஒறேற்றர்' என்று சகலரும் அன்புடன் அழைக்கிறார்களே. அது வழக்கில வந்த கதையைக் கூறுவீர்களா?

நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த காலத்தில் எவ்வித முன்னாயத்தம் இன்றி 'வாழ்க்கையின் இலட்சியம்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய பேச்சினைக் கேட்ட அதிபர் திரு நெவின் செல்வதுரை இவ்வாறு அழைத்தார். அது இன்னும் நிலைத்து நிற்கிறது.

இன்றைய ஆசிரியர்கள் அதிபர்களுக்கு உங்கள் ஆலோசனைகள்...

மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடு ஒழுங்கை வளர்க்க வேண்டுமானால் மாணவர் பிரச்சினைகளை கரிசனையுடன் அணுகி அவர்தம் ஆளுமைக்கு மதிப்பளிக்க வேண்டும். அவ்வாறு அவர்களை நம் வயத்தர் ஆக்கிய பின்னர் அவர்களை உருவாக்குவது சிரமமான காரியம் அல்ல.

### மறக்கமுடியாத அனுபவங்கள்

உங்கள் வாழ்வில் தொழில்துறையிலும், சமூக வாழ்விலும் நீங்கள் ஈட்டிய சாதனைகளைக் கூறுவீர்களா?

நான் சில சம்பவங்களை சஞ்சீவி வாசகர்களுடன் பகிரும்போது, அவற்றை எனது சாதனைகள் என்று இறுமாப்புக் கொள்ள விரும்பவில்லை. எனக்கு வாழ்க்கையில் ஆத்ம திருப்தி தந்த நினைவலைகள் இவை....

இளம் வயதிலிருந்து காந்திய சிந்தனைகளிலும் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் உள்ளத்தைப் பறிகொடுத்தவன் நான்.

அதனால் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த மாணவர்களை அனுமதிக்க முடிந்ததையும், அதனாலே அவர்களை அனுமதித்த முதல் இந்துக் கல்வி நிலையமாக அது திகழ்ந்ததையும் நினைத்துப் பார்க்கிறேன்.

அதிபராக இருந்த பொழுது ஒரு மாணவனை நான் தவறுதலாகத் தண்டித்து விட்டேன். பின்னர் நான் செய்தது தவறென அறிந்ததும், அம் மாணவனிடம் மன்னிப்புக் கேட்டேன்.

எனது இளமைக் காலத்தில் வாலிபர் காங்கிரஸில் ஈடுபட்டு சாதி வெறியைச் சாடி திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் பேசியபோது நிகழ்ந்த கல்லெறி சம்பவத்தை நினைத்துப் பார்க்கிறேன்

நான் வாலிப காங்கிரஸின் இணைச் செயலாளராக இயங்கிய காலத்தில் டொனமூர் சிபாரிசுகளை நிராகரிப்பது என்றும் சட்டசபையைப் பகிஷ்கரிப்பது என்றும் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இம்மாநாட்டுக்கு திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாய தலைமை வகித்தார். நான் அன்று வரவேற்புரை நிகழ்த்தினேன்.

### நகைச்சுவை

பேட்டியின் போது திரு சுப்பிரமணியம் நகைச்சுவையான பல விஷயங்கள், சம்பவங்களை எடுத்துச் சொன்னார். அவற்றில் சில தகவல்களை வாசகர்களும் அறிவது நல்லதல்லவா?

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் மாணவர் மன்றத்தினால் இந்திய தேசிய காங்கிரஸின் மாநாடு ஒத்திகை செய்யப்பட்டது. அப்போது ஒறேற்றர், காந்தி அடிகளின் பாகத்தை ஏற்று நடித்தார்.

'ஹண்டி மாஸ்டரும், நேசையாவும் காந்திய நெறிவழி வாழத் தலைப்பட்டார்கள். நானோ காந்திபோல் நடித்தேன்' என்று சிரித்துக் கொண்டு விளக்கினார்.

ஹண்டி மாஸ்டர் இந்து சமயத்தைத் தழுவியதும் 'அவர் நரகத்துக்குப் போவார்' என்று யாரோ திட்டியதைக் கேட்ட ஒறேற்றர் தனக்குரிய பாணியில் பின்வருமாறு கூறினார்.

'ஹண்டி நரகம் போனால் நரகம் நல்ல ஆரோக்கியம் தரும் சொர்க்கமாக மலரும் என்பதில் ஐயமில்லை'

காந்தியாரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவதில் பெரும்பங்கு வகித்தார் ஹண்டி மாஸ்டர். காந்தியார் இறந்த போது, அவருடைய அஸ்தியை எடுத்து வந்து கீரிமலையில் கரைப்பதில் ஈடுபட்டார் அமைச்சராக இருந்த திரு. கனகரத்தினம்.

இருவரும் அரசியலில் ஈடுபட்டபோது ஒறேற்றர் இவ்வாறு கூறினாராம். 'காந்தியாரை அழைத்து வந்த பெருமை ஹண்டிக்குண்டு காந்தியாரின் அஸ்தியைக் கொண்டு வந்த பெருமை கனகரத்தினத்துக்கு உண்டு'- என்று.

பேட்டிகண்டவர்: வே. வரதசுந்தரம்

★ சமஷ்டி ★ பிரதேச சுயாட்சி ★ அதிகாரப் பரவலாக்கல்

# இனப்பிரச்சினைகளை தீர்த்துவைக்க உலக நாடுகள் கண்ட வழி!

## இலங்கை ஏன் பின்பற்றக்கூடாது

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சுலபமான சில வழிகள் இருக்கின்றன. இத்தகைய முறைகளைக் கையாண்டே பல இன மக்கள் வாழுகின்ற மற்றைய உலக நாடுகளில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது

சமஷ்டி, பிரதேச சுயாட்சி முறை, அதிகார பரவலாக்கல் போன்றவையே இவையாகும்.

சுவிட்ஷர்லாந்து, ரஷ்யா, நைஜீரியா, இந்தியா, சைபிரஸ் போன்ற நாடுகளிலே பல இன மக்கள் வாழ்கிறார்கள்.

ரஷ்யாவில் மாத்திரம் சுமார் நூறு தேசிய இனங்கள் வாழ்கின்றன. அங்கே 15 குடியரசுகள் இருக்கின்றன. அத்தனை இனங்களும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் சுமூகமாகவும் வாழ்கின்றன.

ஒன்றின் சுதந்திரத்தையோ உரிமையையோ மற்ற இனம் சுரண்டவில்லை — விழுங்கவில்லை. ஒவ்வொரு இனத்தின் சுதந்திரம், மொழி கலாசாரத்தின் தனித்தன்மை பாதுகாத்துப் பேணப்படுகிறது.

பௌத்தம், தார்மீகம், சாத்விகம், சமாதானம் பேசிப்பேசி ஒரு இனம் மற்றைய இனத்தைக் கொன்று குவித்து வாழவில்லை.

அண்மையில்கூட ஈரான் தேசத்தில் குர்திஷ் மக்கள் சுயாட்சி கோரி போராடிக்கொண்டிருந்தனர். குர்திஷ் மக்களுக்கு தனிப்பட்ட நாடாளுமன்றம் ஏற்படுத்தி பிரதேச சுயாட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

சைபிரஸிலுள்ள துருக்கிய மக்கள் சுயாட்சி கோரிப் போராடினர். அண்மையில் சுயநிர்ணய உரிமையும் சுயாட்சியும் வழங்கப்படும் விதத்தில் ஓர் அரசியல் முறைஅங்கு உருவாக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட நாடுகளில் நடைமுறையில் இருக்கும் அரசியல் முறையே, அந்நாடுகளில் நிலவும் இன ஒற்றுமைக்கும் சமாதானத்துக்கும் காரணமாகும் இந்நாடுகளில் பிரதேச சுயாட்சி முறை, அதிகார பரவலாக்கல், சமஷ்டிபோன்ற முறைகளைக் கையாண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள். ஜனநாயகத் தத்துவங்களுக்கிணங்கவே இந்த வழிமுறைகள் அமைந்திருக்கின்றன. சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமைகள் பேணப்பட்டிருக்கின்றன.

பல இன மக்கள் வாழும் நாட்டில் இனப்பிரச்சினையைத் தவிர்க்கும் பொருட்டு அரசியல் விஞ்ஞானிகளால் வகுக்கப்பட்ட முறைகளே இவையாகும்.

மற்றைய உலக நாடுகளில் இனப்பிரச்சினை எவ்வகையாகத் தீர்க்கப்பட்டதோ அதே முறைகளையும் வழிவகைகளையும் கையாண்டு இலங்கையிலுள்ள இனப்பிரச்சினையும் தீர்ப்பது சுலபமானது தானே!

அம்முறைகளைப் பின்பற்றி இனப்பிரச்சினையை ஏன் தீர்க்கக் கூடாது?

இந்தியத் தலைவர்கள், செனெட்டர் கென்னடி போன்ற உலகத் தலைவர்களும் எமது நாட்டிலுள்ள கலாநிதி கொல்வின், பீற்றர் கெனமன் போன்ற மூத்த தலைவர்களும் கூட எமது நாட்டுக்கு பிரதேச சுயாட்சி முறை (Regional Autonomy) அல்லது சமஷ்டிமுறையோ உகந்த முறை என அபிப்பிராயம் கூறியுள்ளனர்.

ஆகவே, இலங்கை வாழ் தமிழ் மக்கள் உலகத்தில் இல்லாதது ஒன்றைக் கேட்கவில்லை. மற்றைய நாடுகளில் ஏற்கனவே வெற்றிகரமாக நடைமுறையிலிருக்கும் அரசியல் முறையைத் தான் கையாளும்படி கேட்கின்றனர்.

ஆனால் பௌத்தம் தார்மீகம் பேசும் அரசு ஏன் பௌத்தமதத் தத்துவங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடாது? ஏன் அது தடுமாறுகிறது.

ஓர் இனத்தின் உரிமையையும் சுதந்திரத்தையும் பறிப்பது - மறுப்பது மிக்க அநாகரிகமானது; [illegible] மானது; ஈனத்தனமானது. [illegible] மையையும் இது பறைசாற்றுகிறது.

உயர்ந்த உன்னத மனோ நிலையை உடையவர்கள் இன்னொரு இனத்தினுடைய சுதந்திரத்தையோ, உரிமையையோ பறிக்கமாட்டார்கள் - மறுக்க மாட்டார்கள்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட நாடுகளின் மக்களினதும் அந்நாட்டுத் தலைவர்களினதும் மனோயியல்பை நோக்கும் மிடத்து, அவர்களின் இயல்பை வெகுவாகப் பாராட்ட வேண்டும்.

அவர்கள் மகத்தான மகோன்னத மனோநிலையுள்ளவர்கள் 'வாழு! வாழவிடு!!' என்ற மகோன்னத மனோநிலையுடையவர்கள்.

முழு உலகையும் சுற்றிச் சுற்றி வந்தவர் கூட சமஷ்டி முறை வெற்றிகரமாக செயல்படுகின்ற அமெரிக்க நாட்டிற்கே சென்று புரியாமல் பேசுபவர் போல் இலங்கைக்கு சமஷ்டி சரிவராது என்று கூறுகிறார்.

சுவிட்ஷர்லாந்து முறை சரிவராது போனால் சைபிரஸ் முறை கூட சரிவராதா?

எதற்கும் இதயம் தான் வேண்டும்!

எஸ். எஸ். பி. சுப்பிரமணியம்

# 20 ஆண்டுப் பணியில் யாழ். இலக்கிய வட்டம்

## இலக்கிய சேவையில் முன்னணி வகிக்கும் அமைப்பு

இலக்கியம் பணிசெய்யும் பயணத்தில் பலன் மிகுந்த சாதனைகளைச் சாதித்துள்ள யாழ். இலக்கியவட்டம் தனது 20வது ஆண்டு நிறைவை நல்லூர் இந்து விடுதியில் இன்று பெருமிதத்துடன் கொண்டாடுகிறது.

கடந்த இரு தசாப்தங்களிலும் இலக்கியப் பணியில் முயன்று முன்நின்று உழைத்த அணியாக இது பலராலும் ஏற்கப்பட்டுள்ளது.

சித்தாந்தக் கோட்பாடுகளுக்குள் அகப்பட்டு உணர்ச்சி வக்கிரங்களை வெளிப்படுத்தும் படைப்புகளாக இலக்கியங்கள் இருக்கக்கூடாது.

இதுதான் ஆரோக்கியமான இலக்கியச் சிந்தனையாளரின் நியாயமான எதிர்பார்ப்பாக இருக்க முடியும்.

காலத்தின் தேவைகளுக்கான கருத்துக்களில் காலூன்றி எதிர்காலத் தலைமுறைக்கு ஏற்ற சிந்தனைகளை, செய்திகளை வழங்கக்கூடியதே மக்களுக்குப் பயனுள்ள இலக்கியமாக முடியும்.

இந்தக் கருத்துக் கட்டமைப்பில்தான் யாழ் இலக்கிய வட்டம் தனது இலக்கியப் பணியை நடத்திவருகிறது.

இந்த அமைப்பின் 20வது ஆண்டறிக்கையிலும் இந்த இலக்கியப் போக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். இலக்கிய வட்டத்தின் 20வது ஆண்டறிக்கை தனது அமைப்பின்நோக்கத்தைக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறது.

கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் அவற்றை விஞ்சிய இலக்கிய நோக்கத்தை அடிநாதமாகக்கொண்டு யாழ் இலக்கிய வட்டம் 1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது யாழ் மாவட்டத்திலுள்ள பழைய, புதிய தலைமுறை எழுத்தாளர்களை உறுப்பினர்களாகக்கொண்டு இது செயற்படத் தொடங்கியது.

உறுப்பினர்களின் படைப்புக்களை நூல்களாக வெளியிடுதல், இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுழைத்த பெரியார்கள், எழுத்தாளர்கள் ஆகியோரைக் கௌரவித்தல், மறைந்த எழுத்தாளர்களுக்கு விழா எடுத்தல், புலவர் தினங்களைக் கொண்டாடுதல், இலக்கியப் பிரச்சினை, கதை, கட்டுரை நாடக அரங்குகளை நடத்துதல் கட்சி பேதமின்றி இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல், ஈழத்து நூல்களை மக்கள்முன் பரவலாகப் பிரசாரம் செய்தல்.

இலக்கியத்தில் மேற்கண்ட பணிகளுக்கூடாக வழிப்பயணம் மேற்கொண்டு வந்துள்ளது யாழ் இலக்கியவட்டம்.

இலக்கிய வட்ட அமைப்புக்குள் பிறிதொரு செயற் திட்ட அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

1984 வரை ஈழத்தில் வெளிவந்த இலக்கியப் படைப்புகளின் தரம் தெரிந்து பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் பணியினையும் மற்றும் முதுபெரும் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் பணியினையும் கருத்திற் கொண்டு இலக்கியப் பேரவை செயற்படுகிறது.

ஆக்க இலக்கியத்துறைகளில், இலக்கியஆய்வு, நாவல், சிறுகதைத் தொகுதி, காவியம், கவிதைத் தொகுதி, நாடகத் தொகுதி, சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் தரமான நூல்களைத் தெரிவு செய்யும் பணியை அது செய்துள்ளது.

அதற்கென பல்துறை அறிஞர்களையும் ஈடுபடுத்தி சிறப்பாகச் செய்துள்ளது.

முதல் நிலைத்தெரிவுக்கு 170 உறுப்பினர்கள் கொண்ட அறிஞர் குழுவினை அமைத்து அவ் (7 ஆம் பக்கம் பார்க்க)

- எம். எஸ் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆயுத பலத்தை பெருக்குவது எதற்காக?

இலங்கை இனப் பிரச்சினைக்குப் பேச்சுகள் மூலம் தீர்வு காணுவதற்கு நேர்மையான தரகர் என்ற முறையில் இந்தியா தனது முயற்சியில் தோல்வி கண்டுவிட்டது.

அதன் பின்னர் தான் இந்திய அரசாங்கம் கடுமையான அணுகு முறையைக் கடைப்பிடிப்பது போல் தெரிகிறது.

சர்வதேச நாகரிக நடைமுறைகளை மீறியதாக கொழும்புக்கு நேரடியான எச்சரிக்கையை இந்தியா விடுத்தது.

இதை விட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஊடாக ஜெயவர்த்தன அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்தவும் இந்தியா ஆரம்பித்துள்ளது.

திரு ரொமேஷ் பண்டாரியின் கொழும்பு விஜயம் ரத்தானதைத் தொடர்ந்து இந்திய அணுகு முறையில் மாற்றம் தெரிந்தது.

இந்திய - அமெரிக்க கூட்டு வர்த்தகக் கவுன்சில் கூட்டத்தில் திரு பண்டாரி பேசுகையில், 'ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கு எதிராக வன்செயல்கள் இடம் பெறவில்லை; குடிமக்களுக்கு எதிராகவும் வன்செயல்கள் இடம்பெறுகின்றன. உடன் பிறப்புக்கள் இலங்கையில் கொல்லப்படுவது தமிழ்நாட்டில் பிரதிபலிக்கின்றது. அப்படியான நிலைமையில் டில்லி மௌனமாக இருக்க முடியாது' — என்று எச்சரித்தார்.

ஜெனிவாவில் நடந்த மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி டாக்டர் தில்லனுக்கும் இலங்கைப் பிரதிநிதி டாக்டர் ஹெக்டர் ஜெயவர்த்தனவுக்கும் இனப்பிரச்சினை சம்பந்தமாக சூடான விவாதம் இடம்பெற்றது.

உலக அரங்கு ஒன்றில் இலங்கைப் இனப் பிரச்சினையை இந்தியா எடுத்துச் சொன்னது இதுவே முதல் தடவை. அப்பாவித் தமிழருக்கு எதிராக இலங்கை நடந்து கொள்ளும் முறை பற்றி டாக்டர் தில்லன் அழுத்தமுடன் தான் பேசினார்.

பிரிட்டன், அயர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் இந்தியாவை ஆதரித்தன. இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் பற்றி அந்த நாடுகளும் கவலையை வெளியிட்டன.

இலங்கை அரசுக்கு எதிர்பாராத ஆதரவு சுவிஸ் நாட்டில் இருந்து கிடைத்தது.

'முன்னர் போன்று தமிழர் இலங்கையில் இம்சிக்கப்படவில்லை. எனவே சுவிட்சர்லாந்தில் உள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப முடியும்' — இப்படி சுவிஸ் அரசு ஆச்சரியப்படத்தக்க முறையில் தீர்மானித்தது

இந்தியாவின் கடுமையான போக்குக்கு மூன்று காரணங்கள் உண்டு என்று தமிழீழ விடுதலை இயக்கப் புலிகளின் பேச்சாளர் டாக்டர் ஏ. எஸ். பாலசிங்கம் சொன்னார்.

முதலாவது, ஜெயவர்த்தனவின் பிடிவாதப் போக்கும் பிரச்சினைக்கு ராணுவத்தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற அணுகு முறையும்

இரண்டாவது, அப்பாவித் தமிழ் மக்கள் பெருமளவு அரசபடைகளினால் கொலைப் படுவது.

மூன்றாவது, தமிழ்ப் பகுதிகள் மீது விமானத் தாக்குதல்களை ஆரம்பித்து இருப்பது.

இந்தியாவின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் நாடாளுமன்றத்தில் இணை அமைச்சர் கே ஆர் நாராயணனின் பேச்சில் தெரிந்தது.

'அப்பாவி மக்களைக் கொல்லும் சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்த முடியாது'—இப்படிச் சொன்னார் திரு. நாராயணன்.

அரச வன்செயல்கள் இலங்கைக்குப் புதிது என்பது இதன் அர்த்தம் அல்ல.

1985 ஏப்ரலில் இருந்து 10 மாதங்களில் தமிழ்ப் பகுதிகளில் 2,587 குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்று மனித உரிமைகள் தொண்டர்கள் சொன்னதாக பிரிட்டிஷ் நாளிதழ் 'கார்டியன்' செய்தி வெளியிட்டது

இக்காலத்தில் 12,015 பேர் கைதாகினர். 547 பேர் இருந்த இடம் தெரியாமல் காணாமற் போய்விட்டனர் — இப்படிக் கார்டியன் தெரிவித்தது.

### வெளிநாட்டு சக்திகள்

தீவிரவாதத்துக்கு எதிரான சண்டை என்ற போர்வையில் தமிழருக்கு எதிரான யுத்தத்தில் வெளிநாட்டுச் சக்திகளை அனுமதித்தது குறித்து இந்தியா வெளிப்படையாகவே கவலை தெரிவித்துள்ளது.

தமிழர் பகுதிகளில் வானத்தாக்குதல் நடத்தும் ஹெலிக்கொப்டர் விமானங்களைச் செலுத்துபவர்கள் வெளிநாட்டார் என்று பரவலாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இஸ்ரவேல், பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ். ஆலோசகர்களுடன் இப்போது பாகிஸ்தான் ராணுவ ஆலோசகர்களும் யுத்த விமானிகளும் சேர்ந்துள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு இனப்பிரச்சினை மெதுவாக உபகண்டப் பிரச்சினையாக மாறி வருவது குறித்து டில்லி அச்சப்படுகிறது.

இந்தியாவின் நல்லெண்ண, மென்மையான அயல்நாட்டுக் கொள்கை பலவீனப்பதாக இல்லை என்று தெரிகிறது

### தவறாகப் புரிந்து விட்டனர்

பெயரை வெளியிட விரும்பாத ராஜதந்திரி ஒருவர் பின்வருமாறு சொன்னார்:

இந்திய அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றம், இந்தியாவின் உலகளாவிய கேந்திரக் கொள்கையின் ஒரு பகுதியே.

இளம் தலைவரான திரு. ராஜீவ் காந்தியின் நல்லெண்ண புன்சிரிப்பை அவரின் பலவீனமாக அயல் நண்பர்கள் தவறாகப் புரிந்து விட்டனர்.

அதன் காரணமாக திரு. காந்தி தனது மென்மையான போக்கைக் கைவிட முடிவு செய்துவிட்டார் போல் தெரிகிறது.

பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில் பாகிஸ்தான் கொண்டுள்ள ரகசியத் தொடர்புகள் குறித்து இந்தியா பதற்றம் அடைந்து உள்ளது.

குழப்பத்தில் உள்ள இலங்கைக்குள்ளும் இப்போது பாகிஸ்தான் ஊடுருவுகிறது.

இப்படி அந்த ராஜதந்திரி சொன்னார்.

ஜெயவர்த்தன அரசு மீது கடும் போக்கைக் கடைப்பிடிக்கும்படி தமிழ் நாடு கேட்டு வந்தது.

இலங்கைப் பிரச்சினையில் டில்லி தோல்வி கண்டதால் தான், உள்ளூராட்சித் தேர்தல்களில் தி.மு.க புத்துயிர் பெற முடிந்தது.

யாழ்முன்னாள் எம். பி.யும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் உறுப்பினருமான திரு. வெ. யோகேஸ்வரன் சொன்னார்:

ஜெயவர்த்தனவுடன் பேசி தீர்வுக்கு வரமுடியாது என்ற அபிப்பிராயத்துக்கு இந்தியா இப்பொழுதாவது வந்ததே!

1930களில் ஸ்பெயினில் சர்வாதிகாரி பிராங்கோவிற்கு எதிராக உலக நாடுகளில் உள்ள எல்லா சக்திகளும் சேர்ந்து தொண்டர்படை ஒன்றை உருவாக்கியது.

எமது வறிய மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தவிர்க்க அது போன்ற ஒன்று இன்று நடைபெற வேண்டும் என்று விரும்புகின்றேன்.

— இப்படி திரு. யோகேஸ்வரன் சொன்னார்.

### பேச்சின்போது ஆயுதப் பெருக்கம்

இதனிடையில் ஆயுத பலம் இலங்கை அரசுக்குச் சாதகமாகவே உள்ளது. திம்புப் பேச்சுக்கள் நடக்கும்போது இலங்கை அரசு ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டது.

சில நூறு தீவிரவாதிகள் தமிழ்நாட்டில் பதுங்கியிருந்து கொண்டு, இடைக்கிடைவந்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர் என்பதுதான் முழுப்பிரச்சினையும் என்று இலங்கை அரசு நம்புகிறது.

இதற்கு திரு. பாலசிங்கம் பதில் சொன்னார்:

''இது அபத்தமானது. ஜெயவர்த்தன முற்றாகப் பிழை விட்டுள்ளார்.

இலங்கையில் நன்றாகப் பயிற்சிபெற்ற 15,000க்கு அதிகமான தமிழ் கெரில்லாக்கள் தற்சமயம் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை ஆயுதப் படைக்கே புரியாத போர் முறைகளுடன் நல்ல ஆயுதங்களை வைத்துக் கொண்டு அவர்கள் போராடுகிறார்கள்.

## போராளிகளை தோல்வி காணச் செய்வதற்கு அல்லவாம்

தீவிரவாதிகளை அழித்து தமிழருக்கு எதிரான யுத்தத்தில்தான் வெல்லுவார் என்ற ஜெயவர்த்தனவின் தந்திரோபாயம் கைகூடுமா என்பது எனக்குத் தெரியாது.

— இப்படி பாலசிங்கம் சொன்னார்.

இலங்கையில் அரச படைத்துருப்புக்கள் அதிகரிக்கப்படுவது, நவீன ஆயுதங்கள் குவிக்கப்படுவது எல்லாம் தமிழ்ப் போராளிகளை தோற்கடிப்பதற்கு அல்ல, இந்தியத் தலையீட்டைத் தடுத்து நிறுத்தவே.

புதுடில்லி எவ்வளவோ உறுதிமொழிகளை வழங்கியும் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் இந்தியத் தலையீடு பற்றிய எண்ணம் இருந்து கொண்டுதான் உள்ளது.

''தீவிரவாதிகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து துரத்தப்பட்டு விடுவார்கள். அதற்குப் பின்னர் வடக்கில் உள்ள தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்- இப்படி அமைச்சர் அத்துலத் முதலி பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்

கிழக்கில் வெற்றி கண்டவுடன், சிங்கள மக்கள் அங்கு குடியமர்த்தப்படுவார்கள். அதன் பின்னர் தமிழர் வடக்கு - கிழக்கு இணைப்பைக் கோருவது கஷ்டமான காரியமாகி விடும். அதன் பின்னர் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக ஏதாவது அமைப்பு ஒன்றை தமிழருக்கு வழங்குவது பற்றிய எண்ணத்தை சிங்கள மக்களை ஏற்கச் செய்வது இலகுவாக இருக்கும். இப்படி அமைச்சர் அத்துலத்முதலி கருதுகிறார்.

வானத் தாக்குதலை இடைநிறுத்தஞ் செய்து அமைச்சர் அத்துலத்முதலி விடுத்த உத்தரவு தமிழர் மத்தியில் அவ்வளவாக எடுபடவில்லை.

இது வெறும் கண் துடைப்பு என்று கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வர்ணித்தார்.

"கண்களில் மண்ணைத் தூவும் செயல் இது. உலக நாடுகள் மத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். இலங்கையில் எல்லாம் சரியாக வந்து விட்டது.

அகதிகள் திரும்பலாம் என்ற தப்பபிப்பிராயத்தை உருவாக்கும் இம்முயற்சிக்கு எவரும் ஏமாறமாட்டார்கள்" — இப்படி திரு அமிர்தலிங்கம் மேலும் சொன்னார்.

இதன் அர்த்தம், மீண்டும் பேச்சுக்களுக்கு வருமுன்னர், எதிரியை எவ்வளவு கடுமையாகத் தாக்க முடியுமோ அவ்வளவு கடுமையாகத் தாக்குவதற்கு இரு தரப்பாரும் விரும்புகின்றனர் என்பதே.

அதன் பின்னர் பேச்சுவார்த்தை மேசையில் எழும் குரல்கள் மென்மையானதாகவும் சமாளிக்கக்கூடியதாகவும் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

> 'ஓர் உபகண்டப் பிரச்சினை' — என்ற தலைப்பில் 'த வீக்' (86 மார்ச் 23–29) என்ற இந்திய ஆங்கில வார சஞ்சிகை இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை பிரசுரித்துள்ளது.
> இதை எழுதியவர் பகவன் ஆர். சிங்,
> இதன் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது

### விடுதலைக் குரல்

- நா. சஞ்ஜீவா -

சிறகுகள் முறிந்தன,
கனவுகள் சிதைந்தன
கைகளில் மட்டுமா விலங்குகள்?
விலங்கிடப்பட்டது நம் வாழ்வும்,
தேசமும்

துயரில் எழுதிய வரிகளும்
கானலில் வரைந்த கோலங்களும் அழிக!
ஒரு புது முனைப்புடன் அனைவரும் ஒன்றாய்
ஒளி மிகக் கொண்டு எழுகின்ற
நாளே வருக!

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

★ வித்துவான் க. சி. குலரத்தினம் ★

### காவியப் பாடசாலையில் சேரமுயற்சி

தருமர் எனப்புகழ் பெற்ற சின்னத்தம்பியாருக்கு வாழ்க்கையில் சோதனைக்கு மேல் சோதனைகள் வந்து சம்பவித்தன அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு வாழ்ந்த அவருடைய வீட்டையும் சிலர் பிடித்துக் கொண்ட போது, அவர் மனந்தளராமல், உறவினராய உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்களின் வீட்டில் சிலகாலம் வாழ்ந்ததும் உண்டு. அக்காலத்தில் வேற்பிள்ளை அவர்கள் நாவலர் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்து சைவமும் தமிழும் வளர்த்து வந்தார். பெரிய மனிதர்களை உருவாக்கி வந்தார்.

ஆறுமுக நாவலரின் சைவக் கல்விப் பாரம்பரியம் யாழ்ப்பாணத்திலேயன்றித் தமிழ்நாட்டிலும் தடையில்லாமல் நன்றாகப் பரவலாகப் பரந்து வந்தது. அவரின் மாணாக்கர்களும் மாணாக்கர்களின் மாணாக்கர்களுமான நூற்றுக்கணக்கானோர் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் அமைத்துச் செந்தமிழ்ப் பரிபாலனஞ் செய்து வந்தார்கள்.

நாவலர் இளமைக் காலத்தில் ஆரம்பித்த வண்ணைச்சைவப் பிரகாச வித்தியாசாலை நாவலர் பாடசாலை எனவே வழங்கி வந்தது. அது அவருடைய மறைவுக்குப் பிறகு அவர்தம் தமையனின் மைந்தன் த. கைலாசபிள்ளை அவர்களால் பெரிதாகக் கட்டப் பெற்று நல்லமுறையில் நிலவி வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே அதன் தலைமையாசிரியராயிருந்தவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள். புலவரவர்கள் மயிலணியிலிருந்து நடந்து வந்து படிப்பித்துப் போனவர். வடமொழி, செந்தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பேரறிவு படைத்த அவர் பாடஞ் சொன்னவிதம் அருமையானது எனபர். நாவலர் பாடசாலைக் கட்டடத்தைக் கணபதிப்பிள்ளை 1912 ஆம் ஆண்டளவில் கண்டிருந்தார். மட்டுவிலில் வாழ்ந்த தம்பிமுத்து என்னும் ஆசாரசீலர் திருக்கோயில்களில் புத்தக வியாபாரமும் செய்து வந்தவர். அவர் ஒருநாள் கணபதிப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு வண்ணையில் புகழ்பெற்றிருந்த கூத்துக் கொட்டகைக்கு வந்தார். கூத்து முடிந்த பின் பிற்சாமத்தில் இருவரும் நாவலர் பாடசாலை மண்டபமுகப்பில் படுத்திருந்து போனவர்கள் அது பாடசாலை என்று தம்பிமுத்து சொன்னபோது, நான் அங்கே படித்தாலோ என்று கணபதிப்பிள்ளை வாயூறியவர்.

அக்காலத்தில் அவர் சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களிடம் இராமாயணம் படித்து வந்தார். அவருக்குப் பதினேழுவயதான காலத்தில், வேறபிள்ளை அவர்களின் கடைக்குட்டி மைந்தன் நடராசா, ஊரில் எட்டாம் வகுப்பு வரை படித்தபின், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மேல் வகுப்புப் படிக்க வந்திருந்தார். அவர் வேறபிள்ளை ஆசிரியரின் மைந்தன் என்ற முறையில் அவருக்கு இந்துக் கல்லூரியிலும், நாவலர் பாடசாலையிலும் ஓரளவு செல்வாக்கு நிலவியது. இந்துக் கல்லூரிக்குத் தென்புறத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் அச்சகம் உள்ளது. அதிலிருந்து வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் தமிழில் 'இந்துசாதனம்' என்னும் பத்திரிகையும், ஆங்கிலத்தில் 'இந்துஓகன்' என்னும் செய்தித்தாளும் ஒழுங்காக வெளி வந்தன. தக்கபிரபுக்களும் அறிவாளிகளுமான ஆசிரியர்கள் எவ்வித வேதனமும் பெறாமல் கௌரவமாகச் செய்தித்தாள்களை நடத்தி வந்தார்கள். நாவலர் பாடசாலையை நடத்திய ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்களே 'இந்து சாதனத்தின்' கௌரவ ஆசிரியராயும் இருந்துள்ளார்.

அன்று 1917 ஆம் ஆண்டின் ஐப்பசி மாதத்தில் ஒருநாள் இந்துசாதனப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று. அதனை இந்துக் கல்லூரி மாணாக்கன் நடராசா கருத்தூன்றிப் படித்துக் குதூகலமடைந்தார்.

வண்ணை நாவலர் பாடசாலையில் காவிய வகுப்புகள் ஆரம்பிக்கப் போவதாயும், பயிலவரும் மாணாக்கர்களுக்கு உணவு உடை, உறைவிடம், நூல்கள் யாவும் இலவசமாக வழங்கப் பெறும் என்றும் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அந்த வகுப்பில் தன் நண்பன் கணபதிப்பிள்ளையையும் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்ட நடராசா உடனடியாக மனேச்சர் ஐயா என வழங்கிய கைலாசபிள்ளை அவர்களிடம் சென்றார். நடராசாவின் தந்தையாரிடம் மனேச்சர் ஐயா படித்தவராகையால், அதோடு உறவினர் என்பதால் நடராசாவுக்குப் பெரியவரைக் காண்பது இலகுவாயிற்று.

### பிள்ளையின் காவிய ஊக்கத்துக்கு நடராசா கால்கோள் செய்தார்

பெரியவரோடு பாடசாலைத் தலைமையாசிரியரான புலவர் ஐயா அவர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். இருவரையும் முறையாக வணங்கியபின் நடராசா தமது விண்ணப்பத்தை வெளியிட்டார். 'தமிழ் படிப்பதில் ஆர்வம் நிரம்பிய என் [illegible] ஒருவரைத் தாங்கள் [illegible] காவிய வகுப்பில் சேர்க்க வேண்டித் தங்களைக் காணவந்தேன்' பெரியவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். இருவர் கருத்தும் கலந்தன. மனேச்சர் ஐயா அவர்கள், நடராசாவைப் பார்த்து, 'மிகவும் நல்லது. பரீட்சை தினத்தன்று அந்தப் பையனை அழைத்துவாரும். பார்த்துச் செய்யக் கூடியதைச் செய்யலாம்' என்றார்.

இதைக் கேட்டதும் மகிழ்ந்த நடராசா அன்று பின்னேரமே மட்டுவிலுக்குச் சென்று தருமர் சின்னத்தம்பிக்கும் மைந்தர் கணபதிப்பிள்ளைக்கும் மகிழ்ச்சியான செய்தியைக் கூறினார் சின்னத்தம்பியார் மகிழ்ந்து உரிய தினத்தில் மைந்தனை அங்கே கூட்டிக்கொண்டு வருவதாகக் கூறினார்.

பரீட்சைத் தினத்தன்று காலை நடராசா நாவலர் பாடசாலைக்குச் சென்று பார்த்தபோது, சின்னத்தம்பியாரையோ அன்றிக் கணபதிப்பிள்ளையையோ அங்கே காணவில்லை. அவர் மனவருத்தத்தோடு பெரியவர்களிடம் சென்று, மன்னிப்புக் கோரிப் பரீட்சைக்கு வேறொரு தினம் குறிப்பிட்டுக் கொண்டு சென்றார். தமது நண்பரும் முன்னர் கணபதிப்பிள்ளைக்கு எழுவாய் எடுக்கும் வழியைக் காண்பித்தவருமான தியாகராசா என்பவருக்கு உருக்கமாகக் கடிதம் எழுதி [illegible] குறித்த நேரத்துக்கு நாவலர் பாடசாலைக்கு அழைத்துவருமாறு கேட்டிருந்தார்.

# சமதர்ம சிந்தனைகளை அவாவிய தமிழ் ஞானி

சங்கானைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் டொனமூர் திட்டத்தைக் கண்டித்து பெரியார் பேரின்பநாயகம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பிரபல சட்டமேதை கொல்வின் ஆர். டி சில்வா உரையாற்றினார். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வீதியில் முதல் பாராளுமன்றத் தேர்தலுக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி அபேட்சகர் பேரின்பநாயகத்திற்குத் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் பெரியார் வி சுந்தரலிங்கம் அவர்களுடன் பண்டிதமணி ஐயா சி கணபதிப்பிள்ளை அவர்களும் உரையாற்றினார். அவ்வுரையில் இரு பிரதான கருத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. அந்தோனிப்பிள்ளை ஒரு கிறீஸ்தவ வாலிபன். எங்கள் வி க ஒரு பழுத்த சைவப்பழம். சென்னையில் தொழிலாளர் போராட்டம் நடந்தது அந்தோனிப்பிள்ளைக்கு ஆதரவு தெரிவித்தற்காக வி க அவர்களும் உண்ணாவிரதமிருந்து போராட்ட வெற்றிக்கு உதவினார்கள். (வி கலியாண சுந்தர முதலியார்)

இதே போலத் தான் நாங்களும் எங்கள் பேரின்பநாயகத்துக்கு ஆதரவு வழங்கி இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் பிரசாரம் செய்கிறோம் என்று கூறினார் பண்டிதமணி அவர்கள். உயர் திரு கமலா நேருவின் உரை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கள் பேரின்பநாயகமும் துணைவியாரும் பிரசங்க மண்டபத்தில் பிரவேசிக்கிறார்கள். அங்கு குழுமியிருந்த அறிஞர் பெருமக்கள் மகாசனங்கள் அனைவரும் எழுந்து நின்று தலை வணங்கி மரியாதை செலுத்திய காட்சியை எம்மால் இலகுவில் மறந்து விட முடியாது என்றார் தொடர்ச்சியாக.

இரு பெரியார்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் டாக்டர் என். எம். பெரேரா மற்றவர் தோழர் சிற்றம்பலம். காந்தியடிகள் காட்டும் நெறி இலங்கைக்கும் உகந்ததென்றார் என். எம் பெரேரா. பேரின்பநாயகம் தலைமையில் காந்தியடிகளை இலங்கைக்கு வரவழைத்தது சிங்களவர்களையும் சிந்திக்க வைத்தது என்றார். பேச்சை முடித்துக் கொண்டு ஐயா அவர்கள் ஆறி இருந்தார்கள். ஐயா அவர்களை நான் அணுகி நின்று பின்வருமாறு கூறினேன. 'காந்தியடிகளை இலங்கைக்கு வரவழைத்துச் சிங்களவர்களாகிய எங்களுக்கும் சுதந்திர தாகத்தை ஊட்டியவர்கள் தமிழினத் தலைவர்களே. இதனால் தான் சேர் பொன். இராமநாதனுக்குப் பின் சேர் வை. துரைச்சாமி அவர்களை அரசாங்க சபை முதல்வராக்கிக் கௌரவித்துள்ளோம். என்று சட்டமேதை கொல்வின் ஆர். டி. சில்வா, சங்கானையில் பேரின்பநாயகம் தலைமையில் அப்போது நடந்த கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது கூறியதைச் சுட்டிக் காட்டினேன். காந்தியடிகளை இலங்கைக்கு வரவழைத்த போது நான் பாலகனாகத் தரிசனம் பெற்றதையும் குறித் தமிழினத் தலைவர்களைக் கௌரவித்த சிங்களத் தேசியத் தலைவர்களின் சமசமாஜப் பேரணியில் சேர்ந்து செயலாற்றுவதையும் ஐயா அவர்களுக்குத் தெரிவித்தேன். அப்படியா? மிக நல்லது என்றார். ஐயா அவர்களின் அரசியற் கருத்தை இன்றும் நினைத்து நினைத்துச் சிந்திக்கிறேன்.

எங்கள் ஈழகேசரிப் பெரியார் நா. பொன்னையா அவர்களின் சிபாரிசின் பேரில் 1947 பிரசாரத்தில் விவசாய வாலிபனாகப் பங்கு பெற்ற அநுபவம் பேரின்பநாயகத்தின் அடிச்சுவட்டில் இணைத்தது.

க. ச. கந்தசாமி

அடக்கமில்லாத மாணவன் - புரட்சிப்பேர்வழி என்று இந்துபோட் அட்சலிங்கம் அவர்கள் என்னை ஆசிரியகலாசாலைப் பிரவேசத்துக்கு அனுமதிக்க மறுத்தபோது கூறினார். பண்டிதமணி ஐயாவும் பக்கத்தில் ஒரு தெரிவுக் குழு பிரமுகராகவே இருந்தார். அப்போது என்னைப்பற்றி ஐயாவுக்கு எதுவுமே தெரியாது எனக்கும் ஐயா அவர்களைப்பற்றித் தெரியாது. 1947 தேர்தற் பிரசாரத்தில் சந்தித்த பின்புவரை எனக்கும் ஐயாவுக்கும் தொடர்பு இருந்ததில்லை.

1935 தொடக்கம்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நவீனம்

# வடக்கே போகும் ராமனுஜம்

★ இக்கவயல் ★

அது மாத்திரமன்றித் தமிழனைத் தமிழன் சுரண்டுவதை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. சாதி, மத, இன, மொழி பேதம் கடந்தது தான் சுரண்டல் என்பதை அவன் இன்னும் அறியவில்லை. அவன் இன்னும் சிறு குழந்தை தான்!

அவன் வெளியே வந்ததும் வட்டிக்குக் காசு கொடுத்தவர் பின் தொடர்ந்தார்.

ஆறுமுகம் என்பது அவர் பெயராம். வட்டியும் முதலுமாகத் தனக்கு ஐந்நூற்று எழுபத்து இரண்டு ரூபா கணக்காம். அதனுல் அவனின் பொலியஸ்ரர் 'ரேடியோ' வட்டிக்காரன் தூக்கிக் கொண்டான்.

'இப்போதுதான் ஐந்நூற்று இருபது ரூபாய் தந்தாய். அரைமணி

## அத்தியாயம் - 7

நேரத்துக்குள் வட்டிக்காக ஐம்பத்து இரண்டு ரூபா ஆகிவிட்டதா,இலங்கேசன் கேட்டான்.

'ஆமா ... அது தான் தம்பி கப்பல் வட்டி. தம்பி ஊருக்குப் புதுசு போலே, ஆறுமுகம் நெருட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

பொலியஸ்ரர் பிசை ஆறுமுகம் எடுத்துச் சென்ற பின்பு ஒரு பிரச்சினை முடிந்தது. கேட்டுக்கு வெளியே வந்தான் இலங்கேஸ்!

பெட்டியைத் தூக்கப் பையன்கள் சிலர் ஓடி வந்தனர்.

'கோச்சு' வண்டிக்காரர் பலர் 'என் வண்டியில் ஏறு' 'என் வண்டியில் ஏறு' என அவன் கையைப் பிடித்து இழுத்தனர்.

இந்தியா 'சுதந்திரம்' பெற்ற பலன்களில் இதுவும் ஒன்று என அவன் மனம் கேட்டுக்கொண்டது.

'ஐந்து ரூபா தாருங்கள். நீங்கள் தங்க 'லாட்ஜ்' பிடித்துத் தருகிறேன் என அழைத்தான் 'கோச்சு' வண்டிக்காரன்.

அப்போது இலங்கேசனுக்குத் தெரிந்த ஒருவரும் அவனது 'கோச்சு' வண்டியில் ஏறிக்கொண்டார்.

'கோச்சு' வண்டி 'விஜி லாட்ஜ்' என்ற பெயருடைய கட்டிடத்துக்கு அருகில் நின்றது.

பத்து ரூபாவை எடுத்து நீட்டிய இலங்கேசவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

'ஒரு ஆளுக்கு ஐந்து ரூபாச் சொன்னேன்; நீங்கள் இரண்டு ஆள் வந்திங்க, கணக்குச்சரி.

ஏதோ முற்பிறவித் தண்டனை போலும் என எண்ணி இதையும் ஏற்றுக்கொண்டான் அவன்.

அந்த லாட்ஜில் அவன் சென்று படுத்ததுதான் தெரியும்! மற்றையநாள் பொழுது விடியும் மட்டும் அவன் உறங்கினன்.

அவன் நல்லாக உறங்கட்டும்; தலைமன்னருக்கு மீண்டும் காலடி எடுத்து வைக்கும் வரை நிம்மதியை அவன் காணப் போவது இந்த இரவில் தான்!

தமிழர்கள் சிலரின் மன விசாலத்தையும் அவன் படிக்கப்போவதும் இனிமேல்தான்!

★ ★ ★

### இராமேஸ்வரத்தில் இருந்து திருச்சிவரை

அடுத்த நாள்—

ஒரு மணிக்கு ராமேஸ்வரத்தில் இருந்து, புறப்படும் மெயில் வண்டி திருச்சி ஊடாக சென்னைக்குச் செல்லும்.

பகல் 10 மணிவரை தூங்கிய இலங்கேஸ் விழித்துக் கொண்டான். இராமேஸ்வரத்திலுள்ள திருத்தலத்தை அன்வு நன்கு தொழுதான். அங்கு கட்டப்பட்டிருந்த ஆயிரங்கால் மண்டபத்தைப் பார்த்துத் திராவிட சிற்பக் கலையின் மேன்மையை அறிந்து கொண்டான்.

அதன் பின்பு மத்தியான நேரம் யாழ்ப்பாணச் சாப்பாடு தேடி அலைந்தான் இலங்கேசன். எங்கு அலைந்தாலும் வெள்ளைச் சோறுதான் தென்பட்டது. சரி இனிமேல் வீடு போகும் வரை இதுதான் என நினைத்துக் கொண்டு தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டான்.

அவசரம் அவசரமாக சாப்பாட்டை முடித்துக் கொண்டு ராமேஸ்வரம் ரயில் நிலையத்தை அடைந்தபோது சென்னை ரயில் அங்கு நின்று கொண்டிருந்தது. சென்னை போகும் பலர் ரயிலில் ஏற்கனவே இடம் பிடித்துக் கொண்டார்கள்.

ஒரு சீற் பிடித்துத் தருகிறேன். மூன்று ரூபா தருகிறீயா எனக் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்த போது காக்கிச் சட்டையுடன் அங்கே புறேக்கர் ஒருவர் நின்று கொண்டிருந்தார் 3 ரூபா கைமாறிய போது இலங்கேசுக்குக் கோணர் சீற் கிடைத்தது.

பாம்பன், தங்கச்சிமடம், இராமநாதபுரம், பரமக்குடி, மானமதுரை, சிவகெங்கை வழியாக ரயில் ஓடியது.

இலங்கை போன்று ரயிலில் 'கன்டீன்' இல்லாத குறை இலங்கேசை வாட்டியது. கொழும்புக்குப் போகும்போது, முட்டை, கட்லட், ரீ அத்துடன் சிலோன் பிரிஸ்டல் பத்தும் போது என்ன ரசிப்பு.

ரயில் மானமதுரையில் வந்து நின்ற போது இலங்கேசுக்கு ஒரு சினிமாப் பாடல் நினைவுக்கு வந்தது.

'மானமதுரையில் கொண்டாட்டமாம்; ... ......... ஊர்கோலமாம்'

என்ற பழைய சினிமாப் பாடல் ஒன்று இருதயத்தை ஊடறுத்துச் சென்றது. மானமதுரைச் சந்திப்பில் ரயில் அதிக நேரம் நின்றது.

ஏழு, எட்டு இட்லியும் அத்துடன் சட்னியும் வாங்கிச் சாப்பிட்டான். அத்துடன் இந்தியாக் காப்பியும் அருந்திக் கொண்டான்.

மீண்டும் ரயிலில் ஏறி இருந்தபோது யாரோ ஒருவர் 'மாலைமுரசு' பத்திரிகை விற்பனை செய்து கொண்டிருந்தார்.

'கொழும்புக் கோட்டையில் பத்துத் தமிழ் இளைஞர்கள் உயிரோடு எரிப்பு' தலையங்கச் செய்தி போடப்பட்டிருந்தது.

இலங்கேசன் 'மாலை முரசு' ஒன்று வாங்கிப் படித்துக் கொண்டிருந்தான்.

ஒரு மூலையில் இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பு என அரசியல்வாதிகள் பேசி இருந்தது பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது.

மானமதுரை ரயில்வே ஸ்டேசனுக்கு அருகாமையில் ஏதோ ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

கேட்டுப் பார்த்தால் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகவே அது நடத்தப்படுகின்றது எனத் தெரிய வந்தது. மானமதுரையை விட்டு ரயில் கிளம்பியது.

சிவகெங்கைச் சீமையையும் விட்டு ரயில் புறப்பட்டுச் சென்றது. அப்போது அதிகாரி ஒருவர் ரயிலில் நுழைந்தார்.

"பெட்டிக்குள் என்ன இருக்கு? பாஸ்போட்டை எடு" என்றார் அதிகாரி. பெட்டியை திறந்து காட்டினுன் இலங்கேசன். பெட்டிக்குள் அதிகம் எதுவும் இருக்காது விடவே இரண்டு லக்ஸ் சோப்பை எடுத்துக் கொண்டு சென்றார் அந்த அதிகாரி.

"போகும் போது பெட்டியைக் கவனமாகப் பாரு!; திருச்சிவரை கள்வர், கவனமாகப் பெட்டியை பாரும்" என இலவச அறிவுரை கொடுத்து விட்டுச் சென்றார் அவர்.

"இவரே ஒரு பகல் திருட்டுப் பேர்வழி; அதற்குள் பக்தாத் திருடனைப்பற்றி இவர் வாணிக்கிறார்," எனச் சிரித்தார் அந்தப் பெட்டியில் இருந்த ஒரு பிரயாணி. ரயில் ஓடிக்கொண்டிருந்தது.

"அகதிகளாக வருகிறவர்களிடமே இவங்க காசு அடிக்கிறாங்க உங்களையா விடுவாங்க" என்றார் இன்னொருவர்.

ரயில் கல்லக்குடி, புதுக்கோட்டை ஊடாக திருச்சியை வந்து அடைந்தது.

இலங்கைப் பிரயாணிகள் தமது மூட்டை முடிச்சுக்களை எடுத்துக் கொண்டு சுரங்கவழியாக வெளியே செல்வதற்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றார்கள் "நாம் ஆடுவதும், பாடுவதும் காசுக்கு" என்ற வரிகள் மீண்டும் இலங்கேசன் காதுகளில் கேட்டது.

(தொடரும்)

# யோகபூமி இந்தியா

## ரோக பூமியாக மாறுகிறதே!

கர்மபூமி, தியாக பூமி, யோகபூமி என்று பாராட்டப் பெற்றது பாரத நாடு.

ஆனால் இன்று போக பூமியாக, ரோகபூமியாக நலிவடைகிறது நமது பாரத தேசம்.

ஊனமுற்ற கல்வித்திட்டத்தினுல் விளைந்த கேடு இது

இவ்வாறு வருத்தம் அடைந்துள்ளவர் வேறு யாருமல்லர் பகவான் சத்யசாயிபாபா தான்.

உயர்கல்வி பற்றி அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆங்கிலத்தில் அருளுரை வழங்கிய போது இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தனது அருளுரையில் வழங்கிய கேட்டவர்கள் தான்.

இந்திய தேச பக்தரும், விடுதலைப் போராளியாகவும் விளங்கிய பாலகங்காதர திலகரிடம் ஒரு தடவை விசித்திரமான



சத்யசாயிபாபா

## சத்ய சாயிபாபா கவலை

கருத்துக்கள் வருமாறு:-

ஆசிரியன்

முதலில் ஆசிரியர்கள் தாழ்வுணர்வு கொள்ளக் கூடாது. தாம் ஓர் உயர்ந்த, உன்னத தொழிற்றுறையைச் சார்ந்தவர்கள் என்று அவர்கள் ஆரோக்கியம் சார்ந்த பெருமிதங் கொள்ளவேண்டும் ஆசிர்சர்கள் கூடத் தாது மாணவப் பராயத்தில் ஓர ஆசிரியனிடம் பாடங் கேள்வி ஒன்று தொடுக்கப்பட்டது

இந்தியா விடுதலை அடைந்ததும், நீங்கள் எத்தகைய பதவியை வகிக்க விரும்புவீர்கள்? இதுவே அந்தக் கேள்வி.

"இந்தியா விடுதலை பெற்றதும், அமைச்சராகவோ, அல்லது அரசு அதிகாரியாகவோ பதவி ஏற்க மாட்டேன். ஆனுல் நான் முன்னர் வகித்த ஆசிரியர் பதவியையே நாடிச் செல்வேன். ஆசிரியரானுல், பல அமைச்சர்களை, அறிஞர்களை நாட்டுக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும் அல்லவா" என்று அவர் பதிலளித்தார்.

இன்றைய ஆசிரியர்கள் தாம் வகிக்கும் பதவியின் சிறப்பை உணராமல் இருக்கிறார்கள்.

அறிவியல்

இயற்கையின் இரகசியங்களை அறிய முற்பட்ட மனிதன், காற்று, நீர், பூமி, நெருப்பு ஆகியவற்றைத் தனக்கு அடிமையாக்கி விட்டான். அறிவியல் தொழிற்பாட்டில் மூன்று விதிகளைப் பேண வேண்டும்.

இயற்கை பற்றிய பூரண அறிவு பெறுவது ஒன்று. மனித தேவைகளுக்கு இயற்கையின் சக்திகளைப் பயன்படுத்துவது இரண்டாவது. பாதிப்புக்களைத் தவிர்க்கும் வகையில் இயற்கையின்சக்திகளுக்கு இடையே ஒரு சமநிலையைப் பேணவேண்டும்.

இயற்கையைக் கட்டுப்படுத்தப் பழகிய மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தப் பழகவில்லை இதுதான் இன்றைய மனிதனின் பரிதாப நிலை.

"தந்தையே, நீங்கள் உலகங்களை எல்லாம் கைப்பற்றி உள்ளீர்கள் நான், எனது என்னும் அகந்தையைக் கட்டுப்படுத்த முடியவில்லை" என்று பிரகலாதன் இரணியனுக்குச் சொன்

சுயநலத்தை ஒழித்து சமூக சேவையில் ஈடுபட மாணவர்களைப் பயிற்றும் கல்வித்திட்டம் நாட்டுக்குத் தேவை. சுயநலம் அற்ற அன்புணர்ச்சியை இளையோரிடத்து வளர்க்க வேண்டும்.

அன்பு இருவகைத்து. ஒன்று இயற்கையான அன்பு மற்றையது தெய்வீக அன்பு. பிரதியுபகாரம் கருதுவது சாதாரண அன்பு விளைவு கருதாமல் மற்றவர்களுக்கு வழங்குவது தெய்வீக அன்பு நெஞ்சங்களுக்கு இடையே, மனித மனங்களுக்கு இடையே, ஆத்மாக்களுக்கு இடையே விளைவது தெய்வீக அன்பு.

மாணவர்கள் மத்தியில் நல்ல இலட்சியங்களை ஊட்டுவது கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

உலகில் ஒரேயொரு சாதியுண்டு அது மனித குலம். உலகிலே ஒரேயொரு மதம் உண்டு அது அன்பு என்ற சமயம். இதை இளையவர்கள் உணரவேண்டும்.

பேச்சினில் அன்பு உண்மை.

செயலில் அன்பு தருமம்.

சிந்தையில் அன்பு சாந்தி.

-வி.வி.

# புற்று நோய்: சில அறிவுரைகள்

- டாக்டர் வே. கிருஷ்ணராஜா -

சத்திர சிகிச்சை நிபுணர்

சில காரணங்களால் (பணவசதி, சுற்றுடல் நிலை) மேற்கூறிய முறைகள் கைப்பற்றுதல் கஷ்டமாயிருக்கக் கூடுதலாலும் சிலரில் புற்றுநோய் உருவாகுவதற்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுவதாலும், சிலரில் மாத்திரம் புற்றுநோய் தோன்றும் சந்தர்ப்பம் எழக் கூடும்.

எனினும் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்போமானுல் இதனை முற்றிலும் குணமாக்குவது சுலபம் ஆகையால் புற்றுநோய் ஆரம்பத்தில் தென்படும் அறிகுறிகள் நன்கு அறிந்திருக்க வேண்டும். இவை தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

இவையாவன:-

அ. காரணமின்றிய பசியின்மை, உடம்பு மெலிதல்.

பசியின்மையும் உடம்பு மெலிதலும் பல காரணங்களால் உருவாகலாம். உதாரணம் காய்ச்சல், கசநோய், மனநோய், மதுபானம் அதிகம் பாவித்தல், பசியின்மை ஏற்படுத்துவன.

ஆனுல் பசியின்மை, உடம்பு மெலிதல், பல புற்றுநோய்களுக்கு, கூடிய ளவில் குடல்,இரைப்பை, இரத்தப் புற்றுநோய் என்பவற்றிற்கு அறிகுறிகளாகும்.

எனவே இவ்வறிகுறிகள் தென்படின் விரைவில் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

ஆ. உணவு விழுங்குவதில் கடினம்.

உட்கொள்ளப்பட்ட உணவானது கீழே கடத்தப்படுவதற்கு தடை ஏற்படின், களத்தில் புற்று நோயைக் குறிக்கும். வேறு நோய்களாலும் இக்கஷ்டம் ஏற்படினும் 40 வயதுக்கு மேற்பட்டோரில் இவ்வறிகுறி நிச்சயமாகப் புற்று நோயைக் குறிக்கும்.

இ. [illegible] அல்லது அசீரணம் உணவு சமிபாடடையாமல் இருப்பது அல்லது சாதாரணமாக உண்ணும் அளவு உணவு உட்கொள்ள முடியாமல் இருப்பது, இலகுவில் வயிறு நிரம்புந்தன்மை, சாப்பாட்டின் பின் அசௌகரியமாக இருப்பது என்பன இரைப்பை புற்றுநோயைக் குறிக்கலாம்.

ஈ. மலம் கழித்தலில் ஏற்படும் மாற்றங்கள்

விரைவில் ஏற்பட்ட மலச்சிக்கல், மலச்சிக்கலை அடுத்து வயிற்றோட்டம், திரும்பச் சிக்கல் இவ்வாறுன மாற்றங்கள் அதுவும் இரத்தம், சீதம் கசிதலுடன் சேர்ந்தால் பெருங்குடல் புற்றுநோயைக் குறிக்கும்.

உ. குருதியிழப்பு, சீதம் கழிதல்

மலவாசலால் குருதியிழக்கம், பெருங்குடலில் புற்றுநோயையும்; சிறுநீருடன் இரத்தம் செல்வது, சிறுநீரகத் தொகுதியில் புற்றுநோயையும்; இரத்தவாந்தி இரைப்பை புற்றுநோயையும் ஒழுக்கின்றி வரும் அல்லது அதிகமாதவிடாய் கருப்பை புற்றுநோயையும் குறிக்கலாம். இத்தகைய குருதியிழப்புக்கு வேறு காரணங்களும் உண்டு. எனவே உடனே வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

ஊ. மார்பில் கட்டி, உடல் எப்பாகத்திலும் கட்டி, கழலை

இவை விரைவில் தோன்றினுல் சந்தேகத்துக்குரியது வளர்ச்சியற்றிருந்து அல்லது குறைந்த வீதத்தில் வளர்ந்து வந்த ஒரு கட்டி சடுதியாக வளருமானுல் பருமன் அதிகரிக்குமானுல் புற்றுநோயாகலாம். அதே வேளையில் மெதுவாக வளரும் புற்றுநோய்க் கட்டிகளும் உண்டு. எனவே வைத்திய ஆலோசனை பெறவேண்டும். மகளிர் தமது மார்பைத் தாமே (காலத்துக்குக் காலம்) பரிசோதித்து வருவது நன்று. மார்பை விரல்களின் தட்டையான பகுதியால் சோதிக்க வேண்டும். ஏனெனில் விரல் நுனியால் சோதித்தால் அல்லது மார்பைக் கிள்ளிப் பார்த்தால் கட்டியற்றவர்களிலும் கட்டி உள்ளது போன்று தோன்றும்.

எ. சீக்கிரம் ஆறுதபுண்

உடலில் புண் ஏற்பட்டு கிட்டத்தட்ட மூன்று கிழமைகளில் ஆருவிட்டால் வைத்திய ஆலோசனை நன்று அதிலும் வாய்க்குழியில் ஏற்படும் புண்ணுக்கு விரைவில் ஆலோசனை பெறவேண்டும். வேறு காரணங்களாலும் வாயில் புண் ஏற்படலாம்.

ஏ. தொடர்ச்சியான இருமல் அல்லது குரலடைப்பு மூன்று கிழமைக்கு மேலும் தணியாவிடின் நுரையீரல் அல்லது குரல் வளைப்பகுதியில் ஏற்படும் புற்றுநோயைக் குறிக்கலாம்.

ஐ. உடலில் ஏற்கனவே உள்ள கட்டி அல்லது மச்சத்தில் மாற்றம்

சடுதியான அதிக வளர்ச்சி, இரத்தம் வடிதல், நிறம் அதிகரித்தல், அருகாமையில் புதிய கட்டி மச்சம் தோன்றல், புற்றுநோயைக் குறிக்கலாம்.

ஒ. தணியாத மஞ்சட்காமாலை

இரண்டு கிழமைக்கு மேலாக தொடரும் மஞ்சட்காமாலை சதையில் தோன்றும் புற்றுநோய்க்குக் காரணமாகலாம்.

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து புற்று நோய் பலபல வகைகள் அடங்கியதென்றும், வெவ்வேறு மனிதரில் வெவ்வேறு விளைவுகள் ஏற்படுத்தலாமென்றும், ஒரேவகையான புற்றுநோய், வெவ்வேறு மனிதரில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தலாமென்றும் புற்று நோய் பரம்பரையாகக் கடத்தப்படுவதல்ல என்றும் அறிந்தோம்.

புற்றுநோய் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அனேகமானவை முற்றாகக் குணப்படுத்தப்படலாம் என்றும் அறிந்தோம். (முற்றிற்று)

## வைத்திய சஞ்சீவி

### பயன் பெறுங்கள்

வட பகுதியில் இப்போது ஆட்கொல்லி வியாதிகளில் பிரதான இடம் வகிப்பது புற்று நோய்.

அந்த நோய் பற்றியும், தடுப்பு முறைகள் பற்றியும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னோக்குடன் வடமாகாண புற்றுநோய்ச் சங்கம் 'புற்று நோய்' என்ற கையடக்கமான நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

சாதாரணர்களும் விளங்கிக்கொள்ளும் முறையில் இலகு தமிழில், டாக்டர் வே. கிருஷ்ணராசாவால் எழுதப்பட்ட அந்த நூலை 'வைத்திய சஞ்சீவி' பகுதியில் கடந்த நான்கு வாரங்களாகத் தொடர்ந்து வெளியிட்டோம் இன்று அது முற்றுப்பெறுகிறது

'புற்றுநோய்' நூல் ஒவ்வொருவரும் தவறாது படிக்க வேண்டியது வீட்டில் வைத்திருக்க வேண்டியது

முதற்பதிப்புப் பிரதிகள் அத்தனையும் விற்பனையாகிவிட்டன இரண்டாவது பதிப்பு விரைவில் வெளிவர இருக்கிறது.

இதுவரை அந்நூலைப் பெறுதவர்கள் இம்முறையாவது தேடி வாங்கி புற்றுநோய் ஆபத்திலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை ஒரே தடவையில் படித்துப் பயன் பெறுவார்களாக

-ஆசிரியர்

# இனப்பிரச்சினையின் இறுதிக் கட்டத்தில்—

(சென்றவாரத்தொடர்ச்சி)

இந்தியா 'மனிதாபிமான தலையீடு' செய்வதைத் தேர்ந்தெடுக்கப் போவதாக நான் சொல்லவில்லை.

அதற்கான சூழ்நிலைகள் உருவானுல் அப்படியான ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கான ராஜதந்திர ரீதியிலான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'சிறுபான்மை மக்கள்' என்று பன்மையில் இந்தியா கூறியது, இலங்கையின் ஒரு குற்றச்சாட்டுக்கான பதிலாகக் கொள்ள முடியும்.

(இந்தியா தமிழரை மட்டும் தான் கவனிக்கிறது, முஸ்லிம்களை அல்ல என்பது இலங்கை அடிக்கடி கூறும் குற்றச்சாட்டு)

"இலங்கையின் ஐக்கி

### மேர்வின் டி சில்வா

கின்றன என்பது இந்தியக் குறிப்பில் இருந்து தெரிகின்றது.

இந்தியக் குறிப்பை வாசிக்கும் தொழில் ரீதியான ராஜதந்திரி, சர்வதேச அரசியலை நுணுக்கமாக ஆராய்ந்து வரும் எவருக்கும் இது புலனுகும்.

சரியான சொற்களில் குறிப்பிடத்தக்க சாதுரியத்துடன் தனது நிலையை இந்தியா தனது அறிக்கையில் விவரித்து உள்ளது.

சிறுபான்மை மக்கள் தங்கள் சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு தேவையான ஒரு தீர்வைக்காண இலங்கைக்கு உதவும் என்றும் இந்தியா மீண்டும் வலியுறுத்தி உள்ள யத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பேணக்கூடிய சரியான அரசியல் வரையறை"- ஒன்றைத் தான் இந்தியா சிபார்சு செய்கிறது.

சமஷ்டி என்பது பெரும்பான்மையான சிங்கள வர்களுக்கு வெறுக்கப்பட்ட பொருளாக இருக்கின்றது.

Unity, united என்ற சொற்கள் unitary என்ற சொல்லின் அர்த்தத்தில் தான் உள்ளன என்ற ஒரு போக்கு நிலவுகிறது. இது ஒரு வார்த்தைக் குழப்பமே.

இலங்கையும் எல்லா அறிக்கைகளிலும் 'Unitary' என்ற சொல்லைத் தான் பாவிக்கின்றது.

இலங்கை — இந்திய நிலைமையும் அதுதான் என்றும் சில இலங்கை அறிக்கைகள் தெரிவித்தன.

12. 8. 1983க்குப் பின்னர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்ட அறிக்கையில் Unity அல்லது United என்ற சொல் தான் பாவிக்கப்பட்டது. இப்போது செனட்டர் எட்வேர்ட் கென்னடி அமெரிக்க அல்லது இந்திய சமஷ்டி முறையை சிபார்சு செய்கின்றுர் மற்றவர்கள் சமஷ்டிக்குக் கிட்டத்தட்ட மாதிரியான அமைப்பு முறையைத்தான் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ராஜதந்திர நிகழ்வுகள் குறித்து பழம்பெரும் இலங்கை ராஜதந்திரி ஒருவரிடம் அபிப்பிராயம் கேட்டேன்

அவரது பதில் அக்கறையானதாக இருந்தது அவர் சொன்னுர்:

'1983 ஜுலை ஆகஸ்ட் மாதங்களில் நடந்தவற்றைத் திரும்பிப் பாருங்கள்.

'அகதிகள் இலங்கையில் இருந்து வருவதைப் பற்றி திருமதி இந்திரா காந்தி பம்பாய் விமான நிலையத்தில் வைத்து இந்த நிலையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சொன்னுர்.

அப்படியானுல், அண்மைக்கால நிகழ்வுகளின் படி எமது பிரச்சினை இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்கின்றது என்பதை இந்திய ராஜதந்திர நடவடிக்கைகள் காட்டுகின்றன' -இப்படி அந்த ராஜதந்திரி சொன்னுர். (முற்றிற்று)

'இந்தியா இறுதிக் கட்டத்தில் நுழைகின்றது'- என்ற தலைப்பில் கொழும்பில் இருந்து வெளியாகும் 'லங்கா கார்டியன்' சஞ்சிகையில் கட்டுரை ஒன்று வெளியாகியது.

அக்கட்டுரையை எழுதியவர் அச் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. மெர்வின் டி சில்வா.

முன்னர் கொழும்பு டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இவர் இருந்தார்.

சர்வதேச விவகாரங்கள் குறித்து நல்ல புலமைபெற்றவர்திரு. மேர்வின் டி சில்வா அவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது

### அளவு கடந்த மகிழ்ச்சி கூடாது

மனித வாழ்வில் நிலையானது ஏதும் இல்லை என்பது ஞாபகப்படுத்திக் கொள். ஆதலால் வாழ்வு வரும் போது அளவு கடந்த மகிழ்ச்சி அடையாதே! தாழ்வு [illegible]

-சாக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குறி என்ன? குறிக்கோள் என்ன?

மகரிஷி துரோணர் வில் வித்தைகளில் மிகச் சிறந்து விளங்கியவர். அரச குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் அவரிடம் பயிற்சி பெறவே விரும்பினர்.

பஞ்ச பாண்டவர்களும் கௌரவர்களும் துரோண முனிவரிடம் குருகுலவாசஞ் செய்து வில் வித்தை பயின்றனர். வேறு பல அரச குமாரர்களும் அவ்விதமே சேர்ந்தனர்.

வில்வித்தை பயில அனுப்பிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் வல்லமையை அறிய விரும்பி, தமது விருப்பத்தை மகரிஷியிடம் வெளியிட்டனர்.

துரோணர் ஒரு போட்டி தயாரித்தார். மரக்கிளை ஒன்றின் மீது மரத்தாலான ஒரு பறவையைக் குறியாக வைத்தார். போட்டியில் கலந்து கொள்ள மாணவர்கள் தயாராகினர்.

வந்திருந்த அரசகுமாரர்களின் பெற்றோர் ஆவலோடு நடப்பதை அவதானித்த வண்ணம் அமர்ந்திருந்தனர்.

போட்டியில் கலந்து கொள்ள சில தகுதிகள் இருக்க வேண்டும். அத்தகைய மாணவன் தான், தான் கற்றதை எல்லோர் முன்னிலையிலும் காண்பிக்க முடியும். வீரதீர சாகஸங்களை வெளிக்கொணர முடியும் என்று துரோண மகரிஷி அறிவித்தார்.

முதலில் துரியோதனன் வந்தான். அவனைப் பார்த்த துரோணர் 'தம்பி இப்படி வா இந்தக் கோட்டின் முன்னால் நில். இப்பொழுது சொல், என்னைத் தெரிகிறதா? என்றார். 'உங்களை நன்றாகத் தெரிகிறது என் முன்னே தானே நிற்கிறீர்கள்' என்றான் துரியோதனன்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள உனக்குத் தகுதியில்லை. நீ போகலாம் என்று அவனை விலக்கினார் துரோணர்.

அடுத்து சர்மன் வந்தான். அவனிடம் தர்மா! உனக்கு மரம் தெரிகிறதா? என்றார். ஆம் சுவாமி என்றான். உனக்கும் தகுதியில்லை என்ற துரோணர் பீமனை அழைத்தார். பீமா! குடிலின் இருபுறத்திலும் அமர்ந்திருக்கும் மன்னர்களைத் தெரிகிறதா? என்றார். ஆம் என்றான் பீமன். அவனுக்கும் தகுதியில்லை

-ஸ்ரீதரன்-

அடுத்ததாக ஆர்ச்சுனன் அழைக்கப்பட்டான். துரோணர் அவனிடம் 'அர்ஜுனா என்னைத் தெரிகிறதா? என்றார். 'இல்லை சுவாமி' மரம் தெரிகிறதா? இல்லை தெரியவில்லை. மரத்தின் மீதிருக்கும் பறவை தெரிகிறதா? இல்லை சுவாமி. எதுவுமே தெரியவில்லை என்றான். அர்ச்சுனா! பின் என்னதான் தெரிகிறது? 'சுவாமி குறி பார்த்து எய்ய வேண்டிய பறவையின் தலைமட்டும் தான் தெரிகிறது என்றான்.

'சபாஷ்! நீதான் சிறந்த மாணவன் தகுதியுடையவனும் கூட. அம்பை எய்துவிடு என்றார் துரோணர் அர்ச்சுனன் அம்பெய்து அப்பறவையைக் கீழே வீழ்த்தினான்.

துரோணர் தம் மாணவர்களைப் பார்த்து அர்ச்சுனன் அம்பு எய்வதில் மட்டுமே கவனமாயிருந்தான். அதனால் வேறு ஒன்றும் தெரியவில்லை. இலட்சியத்தில் குறியாக இருப்பவனுக்கு கவனம் சிதறக்கூடாது. கருமமே கண்ணாயிருக்க வேண்டும் அப்போதுதான் கற்ற கல்வி வெற்றியளிக்கும் என்றார்.

## சாரணப் பெருமை

பாடுவோம் எல்லோரும்
 பாடுவோம் எல்லோரும்
பலவித துன்பங்கள்
 பனிபோல மறைந்திட
பாடுவோம் எல்லோரும்

சாரணர் வாழ்க்கை என்றும்
 நிலையான வாழ்க்கை எங்கள்
நிலையான வாழ்க்கை எங்கள்
 சாரணர் வாழ்க்கை
அதனால் சாரணராய் சேர்ந்து
 ஒன்றாய்மகிழ் வோம் நாமே

பேடன் பவல் என்று விட்டால் போதும்
 சாரணியத் தந்தை என்று புரியும்
இந்த வாழ்க்கை கிடைத்து விட்டால்
 ஆனந்தம் தானே அதனால்
அனுபவிக்க தயங்கக் கூடாது

படிப்படியாய் படிக்கும் போது தெரியும்
 சாரணியம் என்ன வென்று புரியும்
இந்த வாழ்க்கை கிடைத்து விட்டால்
 ஆனந்தம் தானே அதனால்
அனுபவிக்க தயங்கக் கூடாது.

சாரண மாணவன் ச. றுபன்,
பளை மகா வித்தியாலயம்,
பளை.

## தேயிலையைப் பற்றி தெரியுமா உங்களுக்கு?

த. நந்தகுமரன்
யாழ் இந்துக் கல்லூரி

'டீ பார்ட்டி'யைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தேனீர் வைபவம் என்று கூறிவிட்டு அங்கு என்ன வெல்லாமோ குடிப்பார்கள்

தேயிலையை முதன் முதல் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? சீனர்தாம். கி.மு. 2787ஆம் ஆண்டிலேயே சீனர் இதனைக் கண்டுபிடித்தனர்.

சீன மன்னர் ஷென்நுங் கானகத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னே அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைக்கப் பட்டிருந்தது.

அப்போது மரத்திலிருந்து சில இலைகள் அந்தக் கொதி நீரில் விழவே, அது பொன்னிறமாகச் சிவந்தது நறுமணமும் சேர்ந்தது. அதை மன்னர் குடித்ததும் புதுத் தெம்பு பிறந்தது. தேயிலைப் பானம் ஏற்பட்ட கதை இதுதான்.

தேநீர் பருகுவது நாளடைவில் நாகரிகமாக மிளிர்ந்தது. தரமான தேயிலையை எல்லா நாடுகளும் விரும்பி வாங்கின. இலங்கைத் தேயிலை மிகுந்த தரமுள்ளதாகக் காணப்பட்டது.

எல்லோருக்கும் தேநீர் மீது மோகம் பிறந்தது. பாலுடன் கலந்து குடித்துப் பருக ஆரம்பித்து விட்டனர். தேயிலைச் செடியின் நுனியில் உள்ள இரு இலைகளையும் அவற்றின் மேலுள்ள துளிர்களையுமே கிள்ளி எடுப்பார்கள்.

சிறப்பு வைபவங்களிலெல்லாம் தேநீர் முதலிடம் வகிக்கின்றது. இன்று உலகநாடுகளில் தேயிலை வர்த்தக ரீதியில் அதிக விலை போகிறது.

இப்போது உங்களுக்குக் களைப்பாக இருக்கிறதா? ஒரு கோப்பை தேநீர் பருகளாமே!




## குழந்தைகள் பற்றி பத்துக் கட்டளைகள்

1. அலட்சியப்படுத்தக் கூடாது.
2. விமர்சிக்கக்கூடாது.
3. அதிகமாக பாதுகாக்கக் கூடாது.
4. அதிகமாகத் தடை விதிக்கக் கூடாது.
5. ஒரு குழந்தையை மற்றக் குழந்தையுடன் ஒப்பிடக் கூடாது.
6. குழந்தைகளின் நியாய பூர்வமான ஆசைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும்.
7. எதிர்காலத்தைப் பற்றி அதிக ஆசை, ஆர்வம், எதிர்பார்ப்பு ஆகியவை இருக்கக் கூடாது.
8. குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.
9. நற்பண்புகளை வளர்க்க வேண்டும்.
10. குழந்தைகளின் முன் சண்டை இடக் கூடாது.

## சமயற்கலை

### கஜூ அல்வா

தேவையான பொருட்கள்:-
கஜூ - 1 இறுத்தல்
பால் - 1 பைந்
சீனி - 2 இறுத்தல்
நெய் - 2 தேக்கரண்டி (Teaspoon)
வனிலா - சிறிதளவு

செய்கைமுறை:-

கஜூவை சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக்கொள்ளவும். சீனியையும் பாலையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைத்து நன்றாக காய்ச்சவும். பதமாக வந்ததும் கஜூவையும் அதில் போட்டு மறுபடியும் கிளறவும் இறுகியதும் நெய்யையும் வெனிலாவையும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஒரு தட்டையான பாத்திரத்தில் நெய் தடவி கலவையை போட்டு சூட்டுடன் வாழையிலையால் சமப்படுத்தி வெட்டி விருந்தினருக்குப் பரிமாறிக் கொள்ளலாம்.

### கூட்டுச்சோறு

தேவையான பொருட்கள்:-
1 கொத்து சோறு
புளி - கால் இறுத்தல்
செத்தல் மிழகாய் 15
மல்லி, சின்னச் சீரகம், கடுகு, உழுத்தம் பருப்பு, கருவேப்பிலை சிறிதளவு தேவையான அளவு தேங்காய் எண்ணெய்.

செய்கைமுறை:-

முதலில் வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய்விட்டு சூடு ஏறியதும் மல்லி, சீரகம் என்பவற்றை போட்டு நன்றாக வதக்கி அம்மியில் பட்டுப்போல் நன்றாக அரைக்கவும். புளியை தண்ணீரில் கரைத்து வைக்கவும் மீண்டும் கடுகு, உளுந்தம்பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றை எண்ணெயில் போட்டு பொரிக்கவும் பொரிந்ததும் புளிக்கலவை, அளவான உப்பு, அரைத்த மசாலா ஆகியவற்றை போட்டு நன்றாக கொதிக்க வைக்கவும். 5 நிமிடத்தின்பின் இறக்கவும். கலவை இறுக்கமா இருக்கவேண்டும். அதற்குள் சோற்றைப்போட்டு நன்றாக கிளறவேண்டும். இதுவே கூட்டுச்சோறு ஆகும்.

## உணவு பற்றிக் கூறும் உலகப் பொன்மொழிகள்

1. சத்தற்ற உணவு நோயைத் தேடிப்பிடிக்கின்றது (அரேபியா)
2. நீ பெற முடியாத கொழுத்த உணவை விடவும் ஒரு வேளைக்கஞ்சி மிக மிக உயர்வானது (ஆங்கிலம்)
3. திட்டமிட்ட சிறந்த உணவே அருமருந்து (இத்தாலி)
4. பழம் இல்லாத விருந்து பாட்டுக்கச்சேரி இல்லாத விழாவைப் போன்றது (அரேபியா)
5. உபவாசம் இருந்தால் அது உன்னைக் கொல்லாது ஆனால் பெருந்தீனி உன்னைக் கொல்லும் (ரஷ்யா)
6. புயற்காற்றினால் மாண்டு போகின்றவர்களை விடவும் இரவு உணவைமிதமிஞ்சி உண்டுமடிகின்றவர்களே அதிகம் (ஸ்பானிஷ்)

தொகுப்பு: மு. லக்ஷினி

## குழந்தை இல்லா குறை நீங்க வழி
### தமிழ் மருத்துவ முறை

குழந்தை இல்லாக் குறை நீங்க 'மனநிலை தான்' காரணம் என்று டாக்டர் ரோபின்டன்பர் கூறியுள்ளார்.

தமிழ் மருத்துவத்தில் இக்குறை நீங்க நல்ல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

மாதுளை, செம்பருத்தி மகளிர்க்குரிய கருப்பைக் குறைபாடுகளை நீக்கும். கருப்பையை உரிய முறையில் வளர்க்கும்.

இவைகளைத் தனியாகவோ, சேர்த்தோ குடிநீராக (கஷாயம்) நாளும் அருந்தி வரவேண்டும். கருப்பையில் புழுவினால் கருத்தரிக்காமல் இருந்தால் வேப்பு பயன்படும்.

விலக்கான மூன்று நாள் வேப்பம் பட்டை குடிநீர் 100 மில்லி அருந்த வேண்டும்.

கொண்டைக் கடலை ஊற வைத்து நாளும் காலை ஒரு பிடியளவு சாப்பிடவும். இலந்தைத் தளிர் ஒரு பிடி, பூண்டு திரி- 3, மிளகு- 3 சேர்த்து அரைத்து நெல்லிகளவு விலக்கான 3 ஆம் நாள் முதல் 5 நாள் சாப்பிட்டு வர கருத்தரிக்கும். இப்படி 3 மாதம் சாப்பிட வேண்டும்.

நன்றி: சுமங்கலி.

## பெரிய நிறுவனங்களுக்கு படம் செய்ய பாண்டியராஜன் மறுப்பு

'ஆண்பாவம்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் நடிக, இயக்குநரான பாண்டியராஜனுக்கு பெரிய நிறுவனங்கள் பலவற்றிலிருந்தும் தங்களுக்கு படம் செய்து தரும்படி அழைப்பு வந்திருக்கிறது.

ஆனால் பாண்டியராஜனோ யாருக்குமே படம் செய்து தரத் தயாரக இல்லை எனக் கூறி வருகிறார்.

முக்தா சீனிவாசன் பாண்டியராஜனை வரவழைத்து ஒரு படம் செய்து தரும்படி கேட்டிருக்கிறார்.

"என்னை நம்பி அடுத்தடுத்து மூன்று தயாரிப்பாளர்கள் காத்திருக்கிறார்கள் அவர்களது படங்களை முடித்தபின்பே மற்றவர்களைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்று கூறி நழுவிக் கொண்டு விட்டாராம் பாண்டியராஜன்.

தயாரிப்பாளர் கோபிநாத்தும் பாலசந்தர் மூலமாக பாண்டியராஜனை அணுகிப் பார்த்திருக்கிறார்.

அதற்கு பாண்டியராஜன் "சாரி நான் இப்போதுதான் நடிக்க ஆரம்பித்து இருக்கிறேன். என்னை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை இரண்டு, மூன்று படங்களுக்குப் பின்புதான் நானே முடிவு செய்யவேண்டும். அதனால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார்.

கோபிநாத் விடாமல் பாக்கியராஜிடம் சென்று சிபாரிசுக்கு அழைத்திருக்கிறார். பாக்கியராஜிடம் பாண்டியராஜன் "ஆரம்பத்தில் வாய்ப்பு அளிக்கத் துணிந்த சிறிய தயாரிப்பாளர்களுக்கே நான் படம் செய்து தருவதாகவோ, நடிப்பதாகவோ இருக்கிறேன். தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்" என்று சொல்லி விட்டாராம்.

இதுபோல் சத்யா மூவிஸ், சிவாஜி பிலிம்ஸ் தரவிருந்த வாய்ப்புகளையும் பாண்டியராஜன் நிராகரித்திருக்கிறார்.




தயாரிப்பு: பேரின்பம்

## திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பது அரிது; ஆனால் அதற்கு...!

வாங்க மாப்பிள்ளை வாங்க. குடும்பம், உத்தமி, கரையைத் தொடாத அலைகள் படங்களுக்குப்பின் தேவிஸ்ரீக்கு பட வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இது குறித்து அவர் கவலையோடு கூறுகிறார் இப்படி:

"தமிழ்ப் படவுலகில் திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பது அரிது. ஆனால் அதற்கு நடிகையர் என்று வரும் எல்லோரும் ஏதேதோ எல்லாம் செய்ய வேண்டும்.........

அப்படி ஒரு ஈனத் தொழில் செய்து முன்னேற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

மேலும் சிறு சிறு வேடங்களில் நடிக்க அழைக்கிறார்கள். முக்கியத்துவம் இல்லாத பாத்திரங்களாக இருப்பதால் மறுத்து விடுகிறேன்.

உத்தமி படத்தில் நான் நடித்த காட்சிகள் மட்டும் சுமார் பத்தாயிரம் அடிகளுக்கு மேல் படமாக்கபபட்டது. வெளியான படத்தில் இரண்டாயிரம் அடி கூட நான் வரவில்லை.

நான் இணங்கவில்லை என்பதாலேயே காட்சிகளை சகட்டுமேனிக்கு வெட்டித் தள்ளி விட்டார்கள்.

கரையைத் தொடாத அலைகள் பெரிய படங்களுடன் தீபாவளியன்று வெளியானதால் வெற்றி பெறாமல் போய்விட்டது!

அதேநேரம், தெலுங்கு, மலையாளம், கன்னடப் படங்களில் நல்ல பாத்திரங்களில் நடித்து வருகிறேன்" என்றார் தெலுங்கில் சாகரிகா பெயரில் நடித்துக் கொண்டிருக்கும் தேவிஸ்ரீ!

## தெலுங்கில் மோகன் இப்போது 'டல்'

மோகன் கதாநாயகனாக நடித்து அண்மையில் வெளியான தெலுங்குப் படம் ஒன்று 'ஓஹோ' என ஓடும் என எதிர் பார்க்கப்பட்டது

அந்தப் படத்திற்குப் பல லட்சம் ரூபாவை வாரி இறைத்து ஆர்ப்பாட்டமாக விளம்பரங்கள் செய்து பார்த்தனர். என்னதான் பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்து விளம்பரங்கள் செய்தும், வர்த்தக ரீதியாகப் படத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

அந்தப் படம் தோல்வியைத் தழுவியதால், மோகனை ஒப்பந்தம் செய்ய எண்ணி இருந்த சில தெலுங்குப்பட நிறுவனங்கள் பின்வாங்கி விட்டனவாம்.

## காலில் விழுந்தால் கட்டியணைப்பார் சிவாஜி

இயக்குநர் துரை சொந்தமாகத் தயாரிக்கும் படத்தில் சிவாஜியும் விஜயகாந்தும் ஒன்றாக நடிக்கிறார்கள். இதற்கான தொடக்க விழா பூஜை துரையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

விஜயகாந்த் சிவாஜிக்கு மாலை அணிவித்தபோது சிவாஜியின் முகத்தில் எவ்வித பிரதிபலிப்பும் தெரியவில்லை.

அதேபோல் சிவாஜி, விஜயகாந்திற்கு மாலை அணிவிக்கையிலும், ஏதோ வேண்டா வெறுப்போடு மாலை அணிவிப்பதுபோல் இருந்தார்.

ஆனால் சிவாஜியிடமிருந்து விஜயகாந்த் மாலையை வாங்கிக் கொண்டபோது அவரது காலில் விழுந்து வணங்கியதும், சிவாஜியின் முகம் எல்லாம் மலர்ச்சி.

'நல்லா இரு, நல்லா இரு' என்று சிரித்துக் கொண்டே ஆசீர்வதித்து கட்டிப் பிடித்துக் கொண்டாராம்.

## திரை உலகில்

இயக்குநர் இராம நாராயணனின் முதல் தெலுங்குப் படமான 'நாக தேவதா' (தமிழில் நாகம்) ஆந்திராவில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

*

'மைதிலி என்னைக் காதலி' புகழ் சங்கீதா தெலுங்கில் படு பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

*

இன்றைய கவர்ச்சி நடிகைகள் அனைவருமே ஜெயமாலினியை மரியாதையுடன் 'அக்கா' என்கிறார்கள். இப்படி மற்றவர்களின் நன்மதிப்பினைப் பெறுவது அவ்வளவு சுலபம் அல்லவே!

*

இப்போது டி. ராஜேந்தர் வெளிப்படங்களுக்கு இசையமைக்கவும் பரவலாக ஒப்புக் கொள்கிறார். 'பூக்களைப் பறிக்காதீர்' படத்திற்கு இசையமைப்பதுடன் எல்லாப் பாடல்களையும் அவரே எழுதுகிறார்.

*

பாண்டியராஜனின் 'மனைவி ரெடி' படத்தில் பாலாஜி அப்பா வேடம் ஏற்று நடிக்கிறார். அவருக்கு இணை 'ஆச்சி' மனோரமா!

*

'பாரு பாரு பட்டணம் பாரு' படத்தில் ... காந்திமதி சொந்தக் குரலில் ... பாடி நடித்திருக்கிறார்.

## லட்சுமி விரைவில் திருமணம்

லட்சுமியும் ராஜீவும் சிலமாதங்களாக காதலித்து வந்தனர். விரைவில் இருவரும் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள்.

லட்சுமியை விட இளையவரான ராஜீவுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தையும் உள்ளது.

லட்சுமியின் கணவர் மோகன் என்ன செய்யப் போகிறாரோ? பாவம்!

## இவர்களும் படத்தில்

'கடவுளை நம்புங்கள்' என்ற படத்தில் பாரதிராஜா, டி. ராஜேந்தர், கங்கை அமரன் - மூவரும் கௌரவ வேடத்தில் நடித்து இருக்கிறார்கள்.

படத்தில் நடிக்கும் விஷயத்தையே நேரில் சொல்லாமல் ஒரு விழாவிற்கு அழைப்பதுபோல் அழைத்து அவர்கள் எல்லோரையும் படத்திற்குள் புகுத்தி விட்டார் இயக்குநர் தசரதன்.

## கள்ளவிழிப் பார்வையிலே கட்டுண்டவர் யாரோ?



புது வருஷமும் பிறந்து விட்டது, இந்த வருஷம் படசான்ஸ் எப்படி இருக்கும் என்று யோசிக்கிறாரோ அல்லது கள்ளவிழிப் பார்வையிலே காளையை மடக்கிப் பிடிக்கப் பார்க்கிறாரோ நடிகை ஜீவிதா என்பது யாருக்கு எங்கே தெரியப் போகிறது.

## ★ நட்சத்திர முகவரி ★

ராதிகா
10, பால் அப்பாசாமி தெரு,
தி. நகர்,
சென்னை- 17

பிருந்தா
(பிரியமன்ன பிரபு)
42, ஸ்ரீராம் பேட்டை,
சி. ஐ. டி நகர்
சென்னை- 35

'ஒரு தலைராகம்' சங்கர்
154, ஜானகி நகர்,
ஆழ்வார் திருநகர்,
சென்னை- 87

நாகேஷ்
ஆனந்த பாபு,
127 செயின்ட்மேரீஸ் சாலை
சென்னை- 18

தியாகராஜன்
40, வடக்கு உஸ்மான் ரோடு,
சென்னை- 17

'சின்ன வீடு' அனு
7 சின்னையா பிள்ளைத் தெரு
சென்னை- 17

## 'அவள் போட்ட கோலம்' தொடக்க விழாவில் பாலாஜி

தயாரிப்பாளர் கே. பாலாஜி எந்த வெளிக் கம்பெனியும் உருவாக்கும் படபூஜைகளில் கலந்து கொள்வதில்லை.

ஆச்சரியப்படும் விதத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஒரு படத் தொடக்க விழாவில் கலந்து கொண்டார் பாலாஜி.

பாலாஜியிடம் தயாரிப்பு நிர்வாகியாகப் பல ஆண்டுகள் பணியாற்றி வரும் தேவநாதன் தயாரிப்புப் பொறுப்பு ஏற்றிருக்கும் 'அவள் போட்ட கோலம்' என்ற அந்தப் படத்தின் பூசைக்கு பாலாஜி தவிர அவர் மகன் சுரேஷ் பாலாஜியும் இன்னொரு காரில் வந்திருந்தார்.

## ரேவதியின் புதிய விதி

இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ரேவதி படங்களில் நடிக்க புதிய விதி ஒன்றை வைத்திருக்கிறாராம்.

பெரிய நிறுவனங்களின் படங்களை மட்டுமே ஏற்றுக் கொள்வதுதான் அந்த விதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புவமைத் தத்துவம் ஈந்த அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்

வானவெளியில் திரியும் எண்ணற்ற கோள்களையும்- செயற்கைக் கோள்களையும்- நட்சத்திரங்களையும்- செய்மதிகளையும் பற்றி புரிந்துள்ள அல்லது தெரிந்துள்ள மனிதவர்க்கம் இவை அனைத்தையும் பற்றிய உண்மைகளை உலகத்துக்கு உரைத்த மாபெரும் விஞ்ஞானியான டாக்டர் அல்பர்ட் ஐன்ஸ்டீனை பற்றி தெரிந்துள்ளதா என்ற கேள்வி இன்று எழுவது நியாயமானதே! ஆம்! இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டீனின் நினைவு தினம் (18. 4. 86) நேற்றாகும்.

ஒருவன் விஞ்ஞான உண்மைகளைக் கல்லூரிக்குச் சென்றுதான் அறிந்து கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவன் தானாகவே படித்துப் புரிந்து கொள்ளலாம். ஒரு பயனுள்ள கல்லூரி போதனை நாங்கள் வாயிலாக அறிந்துகொள்ளும் உண்மைகளைக் காட்டிலும் அதற்கு அப்பால் சுயமாகச் சிந்திக்கக்கூடிய வகையில் மூளைக்குப் பயிற்சி கொடுப்பதாக அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான விஞ்ஞானிகளை நாம்பெறமுடியும்' என்று கூறிய ஐன்ஸ்டீன் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜேர்மனியிலுள்ள அல்ம் (ULM) நகரில்பிறந்தார். யூதர் இனத்தவரான இவர் தனது பள்ளிப் படிப்பில் கணிதத்திலும் இயற்பியலிலும் அசாதாரண திறமையுடையவராக விளங்கினார். ஆனால் பாடங்களை மனப்பாடம் செய்யும் முறை தவறானது என ஆசிரியருடன் மோதிக்கொண்டதால் 16 ஆவது வயதிலேயே கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டார்.

1901ம் ஆண்டு தன்னுடைய சகமாணவியாக இருந்த சுவிஸ் பெண்ணை மிலாவோவை திருமணம் செய்து சுவிஸ் குடிமகனானார். 1905 ஆம் ஆண்டு ஒளி அலைக் கோட்பாடு, பிரௌனியன் இயக்கக்கோட்பாடு பற்றிய தத்துவங்கள், ஒப்புவமைக் கோட்பாட்டின் சிறப்பு விதி பற்றிய மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இவற்றின் சிறப்பினால் பொறாமை கொண்ட சில விஞ்ஞானிகள் இவை 'யூதர்களின் இயற்பியல்' எனக் கிண்டல் செய்தனர்.

ஐன்ஸ்டீனுக்கு புகழ் தேடித்தந்த ஒப்புவமைத் தத்துவத்தினை விளக்க அவர் ஒரு தண்ணீரில் மிதக்கும் நீராவிக் கப்பலை நாடுகிறார். கப்பலின் ஒரு அறையில் இருவர் சதுரங்கம் ஆடுகிறார்கள். சதுரங்கப் பலகையில் காய்கள் வைக்கப்பட்டுள்ளன. இப்போது சதுரங்கப் பலகையை அப்படியே மறு அறைக்கு தூக்கிச் சென்று விடுகிறோம். சதுரங்க பலகையைப் பொறுத்தவரையில் நகராத (இடம் பெயராத) காய்கள் அறையைப்பொறுத்தவரையில் இடம் பெயர்ந்தனவே. சரி! அதே அறையிலேயே சதுரங்கப் பலகையை வைத்திருப்பதாக ஒத்துக் கொள்வோம். கப்பல் நகர்ந்து கொண்டிருப்பதை நினைவு படுத்துவோம். சதுரங்கப் பலகையைப் பொறுத்தமட்டிலும் — அறையைப் பொறுத்த வரையிலும் நகராத காய்கள் நகரும் கப்பலைப் பொறுத்தமட்டில் நகர்ந்தனவாகவே ஏற்கப்பட வேண்டும். இனிக் கப்பலும் ஓடாது ஒரே இடத்தில் நிற்பதாக நினைத்துக்கொள்

## பிரபஞ்ச இயக்க ஒழுங்கின் கருவான கடவுளை ஏற்றவர்

வோம். அப்படியெனில் சதுரங்கப் பலகையைப் பொறுத்தமட்டிலும் அறையைப் பொறுத்த மட்டிலும் - கப்பலைப் பொறுத்தமட்டிலும் காய்கள் நகரவில்லை என்பது உண்மைதான் ஆனால் பூமிதான் சுற்றிக்கொண்டு இருக்கிறதே எனவே பூமியைப் பொறுத்தமட்டில் அந்த காய்கள் நகர்ந்தனவாகவே கொள்ளவேண்டும். இதிலிருந்து நாம் எதனுடன் ஒப்பிடுகிறோமோ அப்போது ஒன்றாக இருப்பது வேறு ஒன்றோடு ஒப்பிடும்போது மற்றொன்றாகிவிடும் உண்மையை விளக்கி 1921 ஆம் ஆண்டு ஒப்புவமைத் தத்துவத்தையும் (Theory of Relativity) ஒளி மின் விளைவு (Photo Electric Effect) தத்துவத்தையும் வெளியிட்டமைக்கான விஞ்ஞானத்துக்கான நோபல் பரிசு ஐன்ஸ்டீனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது இவரது சார்பியல் கொள்கையின் வழியே வந்த பொருண்மை - சக்தி - தொடர்பு (Mass-Energy -Relation) சமன்பாடான E=MC2 என்பதன் சிறப்பினால் தான் இன்றைய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க நாட்டிலே நியூயோர்க் நகர புனித தேவாலயத்தில் அமரத்துவம் வாய்ந்த அறுநூறு பெரியார்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பேரரசர்கள் - விஞ்ஞானிகள் - மகான்கள் - தத்துவஞானிகள் சிலரும் அவற்றிலடங்குவர். அவ்வுருவங்களில் இயேசு பிறப்பதற்கு முன் 370 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஹிப்போக்கிரட்டீஸ் முதல் 1950ம் ஆண்டு வரை வாழ்ந்த சிறந்த விஞ்ஞானிகள் 14 பேரினைத் தேர்ந்தெடுத்து சுவர்களில் செதுக்கியுள்ளனர். யார் யாரைச் செதுக்குவது என்பதனை தேர்ந்தெடுக்க டாக்டர் பாஸ்டிக் அமெரிக்க ஐக்கிய நாட்டு விஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஒவ்வொருவரும் தம்மால் சிறந்தவர் எனக் கருதிய 14 விஞ்ஞானிகளின் பெயர்களை டாக்டர் பாஸ்டிக்குக்கு அனுப்பி வைத்தனர். அவ்வாறு எழுதிய அனைத்து மடல்களிலும் டாக்டர் ஐன்ஸ்டீனின் பெயர் எழுதப் பட்டிருந்தது சிறப்பு அம்சமாகும். அமரத்துவம் அடைந்த பல விஞ்ஞானிகளுடைய உருவங்களுக்கு இடையில் உயிருடன் இருந்தபோதே ஐன்ஸ்டீனின் உருவம் தேவாலயத்தில் செதுக்கப்பட்டது. இந்தியா உட்பட பல நாடுகள் தபால் தலைகளில் ஐன்ஸ்டீனின் உருவப் படத்தைப் பொறித்து கௌரவித்தன.

சர்வதேசம் முழுவதும் போற்றும் உயரிய கோட்பாடுகளை தந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டீன், எப்போதும் மிக எளிமையான வாழ்க்கையையே விரும்பினார். சாதாரண மனிதனுக்கு விளங்கக்கூடிய வகையில் தனது கோட்பாடுகளை மிகவும் இலகுவாக விளக்க முற்பட்டார். அறிவியல் அறிஞரான ஐன்ஸ்டீன் சிறந்த நகைச்சுவைஞரும் கூட. 1930ஆம் ஆண்டில் தனது கம்பனி உற்பத்தி செய்த மாத்திரைகளை ஒரு கம்பனி ஐன்ஸ்டீனுக்கு அன்பளிப்பாக அனுப்பி "கடல் பயணம் செய்கின்றபோது ஏற்படும் கடல் நோயை தவிர்க்க இம்மாத்திரைகள் மிகச் சிறந்தவை" என்ற குறிப்பினையும் இணைத்திருந்தது ஐன்ஸ்டீன் மாத்திரைகளையும் குறிப்பினையும் அந்த கம்பனிக்கு திருப்பி அனுப்பி வைத்தார். நாங்கள் அனுப்பிய மாத்திரைகளுக்கு நன்றி. கடற்பயணத்தின் போது அவை பயன்படும் என்பது உண்மைதான் ஆனால் கடல் என்னை நோய்க்கு ஆளாக்குவதில்லை. மனிதர்கள்தான் என்னை நோய்க்கு ஆளாக்குகிறார்கள் மனிதனால் உண்டாக்கப்படும் நோயைத் தீர்க்கும் மருந்தைக் கண்டுபிடிக்க விஞ்ஞானமும் செயலற்று நிற்கிறது என்பதை அச்சத்தோடு கூறிக் கொள்கிறேன்'' என அவரது குறிப்பில் இருந்தது.

''உலகில் நம்மைச் சுற்றிக்காணப்படும் பொருள்களுக்கிடையில் ஒழுங்கை ஏற்படுத்தும் கடவுளை நான் நம்புகின்றேன்: மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் கடவுளை நான் நம்பவில்லை'' என்று கூறிய ஐன்ஸ்டீன் மழை பெய்ய ஆரம்பித்ததும் தன் தலையில் இருக்கும் தொப்பியை எடுத்துக் கோட்டுக்குள் வைத்துவிடுவார். தலை நனைந்தால் நான் எதையும் இழக்கமாட்டேன். தொப்பி நனைந்தால் புதிய தொப்பி வாங்கவேண்டி ஏற்படும் என்றார்.

எந்த மனிதனது வாழ்க்கையில் வெற்றி பெற மூன்று அம்சங்களின் கூட்டு அவசியம் என்று வலியுறுத்திய ஐன்ஸ்டீன் அவையாவன ''கடின உழைப்பு, விளையாட்டு, அவசியம் ஏற்பட்டாலன்றி வாய் திறவாமை'' என்கிறார். ஓய்வு நேரத்தில் வயலின் வாசிப்பதையும், கவிதை புனைவதையும் விரும்பினார்.

புவியின் உள்ள காந்த புலம் பற்றியும், அணுக்களில் உள்ள ஈர்ப்பு-ஈர்ப்புலம் பற்றியும், கோள்களுக்கிடையேயான ஈர்ப்பு ஈர்ப்புலம் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்வதில் தனது வாழ்நாளின் இறுதி நாட்களை செலவிட்ட ஐன்ஸ்டீன், இவ்வாறு மூன்று வகையான புலங்கள் வேறு வகைப்பட்டனவானாலும் இவற்றின் அடிப்படையை ஒரே கொள்கை மூலம் விளக்க முடியும் என்ற நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் இருந்தார் 1955ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி நியூ ஜெர்ஸியிலுள்ள பிரின்ஸ்டன் நகரில் மறைந்தாராயினும் பிரபஞ்சங்கள் உள்ளவரை ஐன்ஸ்டீன் மறையாது மக்களால் போற்றப் பட்டு வாழ்வார்

**சபா - புஷ்பநாதன்**

## உதயம்

பின் இரவு
நிலவின் ஒளி விளிம்பில்
மல்லாந்து படுத்தபடி
விரிந்து கிடக்கும் மணற்பரப்பு
அலை எறியும் கடல்
திமிர்கொண்டு எழுந்து நிற்க
காற்றுடன் பொருதும்
கடல் ஓரத் தென்னைகள்
சேற்று நீரை வாரிக்கொள்ளும்
காற்றுத்திசை தெரிந்து
கரையில் சிறு தோணிகள்
சாய பாய் விரிக்கும்
பாயும் வேகத்தின் பரவசத்தில்
பாலர் குரல் கொடுப்பர்
தூரத்தே விரிகுடா
வெறித்தே நிற்கும் இரட்டைப் பனைமரங்கள்
செவ்வான சுவாலை விரிப்பில்
சிவப்பாய் கனலும் மேகங்கள்
நீளக் கிடக்கும்
நிலத்தில் பனை வடலிகள்
நிரைத்தே நிற்கும்
வடலி வெளிகள் ஊடே
பச்சை வயல் படுக்கை
பசுமை பாய் விரித்து
நெற்கதிர் நிமிர்ந்து எழும்.
காற்றும் கடலும் அலையும்
நீரும் நிலமும் தெருவும்
நிலவும் நேற்று
எமதே என்றிருந்தோம்
மேகத்துள் முழங்குது இடி
இன்று,
சாலைத் தூவி வரும்
சண்டமாருதக் காற்றாய்
இறக்கைகள் முளைவிட்ட
கனத்த இயந்திரங்கள்
புகைக் குண்டுகளை
எச்சமிடும்.

இரத்தமும் சதையும்
சிந்தி சிதறிய தெருக்கள்
இன்று,
'சுதந்திர' தேசத்தின் தேசிய
சின்னங்களாயினவே;
உயிர்த்தெழுவாய் மானிடமே
சுதந்திர உதயத்தில்
மயிர்க்கால்களை சிலிர்த்து

- டானியல் அன்ரனி -

## சமதர்ம....

(3ம் பக்கத் தொடர்ச்சி)
பேரின்பநாயகத்தாரின் அடிச்சுவடு மூலம் 1985-01-07 முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களின் அமரத்துவம் வரை காந்திய சமதர்மத்தலைமைக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. 28-3-84ல் முதலியார் ஐயாவின் குஞ்சிதசரணம் இல்லத்தில் பேரின்பநாயகத்தாரின் பிறந்தநாள் நினைவு தினத்தில் அகில உலக அருள் நெறி மன்றத்தின் இலங்கைக்கிளை புனரமைப்பு நிகழ்ந்தது. முதலியார் ஐயா கேட்கும் திறன் இழந்துவிட்ட என்னையே அதன் செயலாளராக நியமித்தார். தம்முடன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராகவிருந்த புலவர் வெ. கனகசபாபதி அவர்களை இணைச்செயலாளராகவும் தெரிவு செய்து பணியின் தொடர்பை நிலைப்படுத்தினார். இதற்கு முன்பு ஆண்டுகளுக்கு முன்று - பேரின்பநாயகத்தின் பிறந்தநாள் 28-3-80ல் பண்டிதமணி ஐயா அவர்களைத் தரிசித்தேன். எனது குழந்தைக் குரல் பாலர் கவிதைநூலை ஐயாவிடம் சமர்ப்பித்தேன். படித்துக் காட்டும் என்றார்கள். படித்துக் கொண்டிருந்தேன். தாளம் போட்டார்கள். தமது பக்கலில் குழந்தைகளையும் கூப்பிட்டு இருத்தினார்கள். கனிவில்லாத கழுதைக்குரலில் நான் படித்துக் கொண்டிருந்தேன்.

குடமுழ நந்தீசர் மாணிக்கவாசகரான பூர்வசென்ம பந்தம்போல் நீரும் ஒரு பூர்வஜென்ம பந்தத்தினால்...... குழந்தைக் கவிஞர் ஆகிவிட்டீர் என்றார் ஐயா அவர்கள். இசையின் திசை அறியேன். கேட்கும் திறனிழந்தேன் என்று தழுதழுத்துக் கூறினேன் நான். ஐயா அவர்கள் கம்மா இருக்கவில்லை கடதாசியில் நடுங்கும் திருக்கரம் எழுதிக் கொண்டிருந்தது குழந்தைக் கவிஞரின் கவிதா சாமர்த்தியத்தைக் கண்டுபிடித்துத்தந்த இரசிகமணிகளை செந்திநாதனை நினைவு கூர்வோமாக! குழந்தைக் கவிஞர் என்று பட்டம் வழங்கிக்கௌரவிப்போமாக! ஐயாவின் எழுத்தோவியத்தில் இத் திருவாசகங்களும் இடம் பெற்றன.

30-3-80ல் சங்கானை முத்தமிழ் மன்றம் ஐயா வழங்கிய பட்டத்தை குழந்தைக்குரல் வெளியீட்டு விழாவில் அறிமுகம் செய்து கௌரவித்த வைபவம் இனிது நிறைவுற்றது. அரச அதிபர் செ. சிவஞானம் தலைமையில் தெய்வாம்சம் கொண்ட ஐயா அவர்களின் ஆத்மா அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர்வடிக்கின்ற ஆத்மாக்களுக்குச் சாந்தியளிக்க வேண்டுமென்று பிரசார்த்திப்போமாக.

# புதிய உலகின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் கம்பியூட்டர்

இலங்கையில் கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக கம்பியூட்டர்களின் பாவிப்பு அதிவேகமாக அதிகரித்து வருவது நாம் கம்பியூட்டர் யுகத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறோம் என்பதை அறியத்தருகிறது. நாம் கம்பியூட்டர் யுகத்தினுள் குதிப்பதற்கு இன்னும் அதிககாலம் செல்லமாட்டாது என்பதற்கு

## வாழ்வை வசதிப்படுத்தும் மனித முயற்சியில் விளைந்த மிகச் சிறந்த விஞ்ஞானப் பயன்

நமக்கு கம்பியூட்டரின் மேலுள்ள அலாதி ஆர்வம் எடுத்துக்காட்டாகவுள்ளது இதற்குப் பல சான்றுகளுள்ளன.

இன்று கம்பியூட்டர் கல்விக்கு பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கொடுக்கப்படும் முக்கியத்துவம், கம்பியூட்டர் தனியார் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பத்திரிகைகளில் கம்பியூட்டர் துறையில் பயின்றவர்கள் தேவை என்ற விளம்பரங்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு என்பன சில உதாரணங்களாகும். அத்துடன் 1986 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து ஹொங்ஹொங் வங்கி (Hong Hong Bank) தனது கொழும்பிலுள்ள கிளைகளில் பிளாஸ்ரிக் காரட் (Plastic Card) பயன்படுத்தி டெல்லர் இயந்திரம் (Teller Machine) மூலம் கொடுத்தல் வாங்குதல்களை செய்யும் முறையை அறிமுகப் படுத்தவுள்ளது ஓர் முக்கிய எடுத்துக்காட்டாகும்.

நாம் கம்பியூட்டரின் பாவிப்பின் அதிகரிப்பை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அடுத்த சில வருடங்களுக்குள் எமது நாட்டின் முன்னேற்றத்திற்கு கம்பியூட்டர் பெரும்பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் நாளைய உலகில் ஏற்படும் மாறுதல்களை நாம் எதிர்நோக்க வேண்டியிருப்பதால் எமக்கு நாளைய உலகில் பாவிக்கப்படவிருக்கும் கம்பியூட்டரின் அறிவு அவசியமாகிறது

அடுத்து மனிதன் எதற்காக கம்பியூட்டரை உருவாக்குகிறான் என்பதை அவதானிப்போம். கால்நடையாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு சென்ற மனிதன் படிப்படியாக முன்னேறி இன்று விண்கலம் (Rocket) மூலம் ஏன் பிரயாணம் செய்ய முற்பட்டான் என்று சிந்தித்தால் விரைவாகவும் சுலபமாகவும் பிரயாணத்தை மேற்கொள்வதற்காக என்ற காரணத்தை உணர்வது கடினமல்ல இதே போன்று மனிதன் எந்த ஓர் வேலையையும் விரை

## விஞ்ஞானக் கதிர்

வாகவும் சுலபமாகவும் செய்ய முற்பட்டதனாலேயே இன்று மனிதன் சந்திரனுக்கும் மற்றைய கிரகங்களுக்கும் பிரயாணம் செய்யவும், அண்டவெளியில் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கக் கூடிய அளவுக்கு முன்னேறவும் கூடியதாகவிருந்தது. ஆகவே கம்பியூட்டரின் கண்டுபிடிப்பும் இதற்குட்பட்டதாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக கம்பியூட்டர் உருவாக்கத்தை சற்று கூடுதலாக உற்று நோக்கின் இன்று முன்னேறிய மேலை நாடுகளை அவதானிக்கவேண்டும். அங்கு அதிக தொழிற்சாலைகள் உள்ளதனால் அதிக தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் இந் நாடுகளில் தொழிலாளர்கள் பற்றுக்குறையாகவுள்ளது. அதாவது போதிய மனிதவளம் இல்லாமலுள்ளது. இதனால் இவர்கள் மேலதிகநேரம் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது தொழிலாளர்களின் வருமானத்தை கூட்டுவதோடு தனிப்பட்ட வேலைகளை கவனிப்பதற்கான நேரத்தை குறைத்து விடுகிறது எனவே தமது தனிப்பட்ட வேலைகளை கவனிப்பதற்காக போதிய அளவு நேரம் கிடைக்காததால் எம்மைப்போல் அல்லாது மிகவும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டியுள்ளது. இப்படியான கடின உழைப்பே இவர்களை எம்மிலும் முன்னேறியவர்களாக்குவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இந்த நாடுகளில் நேரம் தான் பணம் என்ற நிலைமை உருவாகியது. அதாவது ஒருவருக்கு சிறிது நேரம் கிடைக்குமாறுல் அந்த நேரத்தில் பணத்தை உழைக்கக் கூடிய நிலை. குறிப்பாக ஓர் வர்த்தக நிலைய அல்லது தொழிற்சாலைப் பொறுப்பாளர் அல்லது பொறுப்பான பதவிகள் வகிப்பவர்கள் ஒரு சில நிமிடங்களை ஏன் ஒரு நிமிடம்கூட கூடுதலாக வேலை செய்வதால் அவ்

**நா. சுந்தரராசா**
B.Sc(Eng)(Hons.)A. M.I C.E
பொறியியலாளர் சிமெந்து ஆலை காங்கேசன்துறை

வர்த்தக நிலையத்திற்கு அல்லது தொழிற்சாலைக்கு பல லட்சம்ரூபா வருமானம் கூடுதலாக கிடைக்கலாம் ஆனால் கிடைக்கும் நேரத்தை கூட்டமுடியாது. அத்துடன் நேரம் கிடைக்கும் பொழுது அதை பாவிக்காவிட்டால் அந்த நேரத்தை மீண்டும் பாவிக்கும் சந்தர்ப்பம் எந்த ஓர் மனிதனுக்கும் கிடைக்கமாட்டாது. எனவே கிடைக்கும் நேரத்தை சிக்கனமாக பாவிப்பதே சிறந்தவழி என அறிந்த மனிதன் தனது வேலை செய்யும் ஆற்றலை தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்களில் கூட்டுவதற்கு முயற்சித்ததன் பயன் கம்பியூட்டர் இயந்திரம் உருவாக்கப்பட்டது. இவ்வியந்திரத்தின் உதவியுடன் மனிதன் தனது வேலை செய்யும் ஆற்றலை கூட்டியதனால், இன்று செய்யவேண்டிய வேலைகளை குறைந்த மனிதவளத்திலும் குறைந்த நேரத்திலும் செய்கிறான். இதனால் வருவாயில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படுவதோடு மாத்திரமல்லாது நாடும் முன்னேறுகிறது. இன்று மேல்நாடுகளில் கம்பியூட்டரின் உதவியில்லாமல் இயங்கும் தொழிற்சாலைகள்,வர்த்தக நிலையங்களை காணமுடியாது.

இன்று சிலர் கம்பியூட்டரை அபாரசக்தி படைத்த Electronic மூளை என்றும் இதற்கு மனித மூளையைவிட அதிக ஆற்றலுடையது எனவும் கருதுகின்றனர். இது தவறு உண்மையில் கம்பியூட்டரும் ஏனைய இயந்திரங்கள் போன்ற ஒரு சாதாரணமான இயந்திரமே நீங்கள் அதற்கு விளங்கக்கூடிய அல்லது அர்த்தத்தை கொடுக்கக் கூடியதாக கொடுக்கும் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கக்கூடியது அப்படியானால் கம்பியூட்டர் செய்யும் வியக்கத்தக்க செயல்கள் அனைத்தும் எப்படி நடக்கின்றன

(7ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களுக்கு அதிக வேலைப்பளு: இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல

> இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளை ஏற்பாடு செய்த பெண்ணிலைவாதக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைத் தொடர்ந்து சஞ்சீவியில் வெளியிட்டு வருகிறோம்.
>
> யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா, பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன், யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சி மௌனகுரு ஆகியோர் அரங்கில் கூறிய கருத்துக்களை இங்கு தருகிறோம்.
>
> — ஆசிரியர் —

## பெண்ணிலை வாதம்

வேலைப்பளு காரணமாகப் பெண்கள் பாதிப்புறுவது தனியே தமிழ் சமூகத்தின்அல்லதுயாழ்ப்பாணத்து மக்களின் பிரச்சினை அன்று.

அணைத்துலக நாடுகளிலும் பல்வேறு காலகட்டங்களில் பெண்கள்முகம் கொடுத்த பிரச்சினை இதுவாகும். இன்றும் அவர்கள் அவ்வாறு முகம் கொடுக்கும் பிரச்சினை இதுவாகும் இது ஒரு சர்வதேசப் பிரச்சினை.

மனையலங்காரம், உணவு சமைத்தல், குழந்தைவளர்ப்பு - இவ்வாறு உலகெங்கும் வீட்டு வேலைப்பளுவில் மகளிர் திணறத்தான் செய்கிறார்கள்.

இதனைக் கணவர்கள், அரசாங்கம் மட்டுமன்றி சமூகமும் உணரவேண்டும். இவ் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும்.

பெண்களின் வீட்டு வேலைப் பளுவை எப்படி குறைக்கலாம் என்பது பற்றிய சிந்தனையை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும்.

வீட்டு வேலைகளை ஒழுங்கு படுத்தி, சிராக்கி இலகுவாக்க முயல்தல்

### உலகெங்கும் பெண்கள் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கவே செய்கிறார்கள்

வேண்டும். வீட்டு முகாமைத்துவத்தை நல்ல முறையில் அமைத்து பெண்களின் வீட்டு வேலைப்பளுவைக் குறைக்கமுடியாதா? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நவீன கருவிகளை, உபகரணங்களை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்திப் பெண்களின் வேலைச் சுமையைக் குறைக்கலாம் அல்லவா?

இவ்வேலைகளை யார் யார் செய்வது என்ற சர்ச்சைகளிலும் பார்க்க இப்படிச் சிந்தித்துஉருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது பெண் நலத்துக்கு வழிவகுக்கும்.

ஏனைய நாடுகளில் இப்படிச்சிந்தித்து சிபார்சுகள் செய்து அவற்றை நடைமுறைப்படுத்துகின்றார்கள்

ரஷ்யநாட்டிலே இன்று நேற்றல்ல 1922, 1923 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கமியூனிஸ்ட்கட்சி மாநாடுகளில பெண்களின் வீட்டுச் சுமைபற்றி ஆராயப்பட்டிருக்கிறது. பெண்ணிலைவாதம்அங்கு முன்வைக்கப்பட்டு இருக்கிறது. அதற்குச் சில பரிகாரங்களும் சிபார்சு செய்யப்பட்டு உள்ளன. இவற்றையும் நாம் ஆராய்வது நலம்.

பெண்ணடிமை பற்றி ஆராயும் போது பொருளாதார நிலையும் கவனிக்கப்பட வேண்டும். ஆண் உழைத்துச் சம்பாதிக்கும் பொருள் வருவாயில் ஒரு பெண் தங்கியிருக்கும் நிலை இதற்கு ஒரு முக்கியகாரணியாகும்.

நமது பொருளாதார சமூக அமைப்பில் மாற்றம் ஏற்படுவதன் மூலம் இப்பிரச்சினைகள் பெரும்பாலும் தீரும்.

—கலாநிதி சோ. கிருஷ்ணராசா

பெண்ணிலைவாதக் கொள்கையினர் முன் வைக்கும் கருத்துக்கள் பெரும்பாலும் உடன்பாடானவை.

இருப்பினும் சில மிகைப்படுத்தப்பட்ட செய்திகளாகத் தவறானவையாக அமைந்துவிடத்தான் செய்கின்றன.

ஜெயகாந்தனின் "அக்கினிப்பிரவேசம்" என்ற

(7ஆம் பக்கம் பார்க்க)

சர்ச்சை சக்கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவிக்கு உதவும் பல்கேரிய கணவன்மார்

மனைவிக்கு உதவும் கணவன்மார்கள் பல்கேரிய நாட்டில்தான் இருக்கிறார்கள்.

தினமும் சராசரி 5 மணி நேரத்தை வீட்டில் மனைவிக்கு உதவுவதில் செலவிடுகிறான் பல்கேரியக் கணவன்.

பல்கேரியா ஒரு கம்யூனிஸ்ட் நாடு.

லண்டன் யுனிவர்சிட்டி கல்லூரி நடத்திய ஆய்வில் இது வெளிவந்தது.

மற்ற நாட்டைச் சேர்ந்த கணவன்மார்கள் மனைவிமாருக்கு சராசரி எவ்வளவு நேரம் உதவுகின்றனர் என்பது பற்றிய விவரம் இதோ!

ஜெர்மனி - 3 மணி 21 நிமிஷம்

பிரான்சு - 3 மணி 19 நிமிஷம்

ரஷ்யா - 3 மணி 5 நிமிஷம்

பெல்ஜியம் - 3 மணி 3 நிமிஷம்

பிரிட்டன் - 2 மணி 42 நிமிஷம்

பெரு 1 மணி 1 நிமி.

இலங்கையில் இது பற்றி இனித்தான் ஆய்வு நடத்த வேண்டுமோ?

## அழுகைக்கு தேசிய போட்டி

இந்தோனேஷியாவில் கடந்த புதன்கிழமை புதுவிதமான போட்டி ஒன்று நடைபெற்றது.

தேசிய அழுகைப் போட்டிதான் அது. மனதை உருக வைக்கும் விதத்தில் அழுபவர்களுக்குப் பரிசு!

26 போட்டியாளர்கள் அழுது போட்டியிட்டார்கள். மூவாயிரம் பார்வையாளர்கள் அனுதாபத்துடன் அதை ரசித்தார்கள்.

காதலியை இழந்த கணவன், தாயை இழந்த தனயன், சொத்தை இழந்த வியாபாரி, கண்ணை இழந்த மனிதன் இப்படி பல விடயங்களுக்கு பலரும் ஒப்பாரி வைத்தார்கள்.

தாயை இழந்ததிற்காக ஒப்பாரி வைத்த ரச்மட் சேட்போரோ முதல் பரிசைத் தட்டிச் சென்றார்.

# பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

## இரவு உணவுவிருந்தினால்

### அறுபத்திரண்டரை லட்சம் பவுண் நஷ்டம்

ஒருவர் ஆற அமர்ந்து இரவு உணவு அருந்தியதால் 62 லட்சத்து 50 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண் பணத்தைக் கோட்டை விடவேண்டியதாயிற்று.

இந்தச் சம்பவம் 1865 ஆம் ஆண்டில் அமெரிக்க சிவில் யுத்தம் நிகழ்ந்த வேளையில் ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் நிகழ்ந்தது.

அமெரிக்க கப்பல் சேவையின் பொருள்களை சூறையாடிய 'ஷெனன்டோ' என்ற கப்பல் கைப்பற்றப்பட்டு மெல்போர்னில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

திடீரென இந்தக் கப்பல் மெல்போர்னிலிருந்து தப்பிச் செல்வதாக அமெரிக்க தூதருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

அவர் ஆஸ்திரேலிய சட்டமா அதிபர் ஹென்றி பிக்ட் கன்னரை சந்திக்க விரைந்தார்.

கன்னர் அவ்வேளையில் ஆற அமர இருந்து இரவு உணவு அருந்திக்கொண்டிருந்தார்

அமெரிக்கத் தூதுவர் கன்னரிடம் விடயத்தை விளக்கப்படுத்தினார். கொன்கிளைக்கப்பல் தப்பிச் சென்றால் அதனால் ஏற்படும் நஷ்டங்களை ஆஸ்திரேலிய அரசு அமெரிக்காவிற்கு வழங்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் உறுதியுறுத்தினார்.

ஆனால் கன்னர் அதனைப் பொருட்படுத்தவில்லை.

"முதலில் என்னுடைய சாப்பாடு முடியட்டும். அதுதான் முக்கியம். அதன்பின் மற்ற விவரங்களைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர் கூறினார்.

ஆனால் கன்னர் சாப்பிட்டு முடியும் வரை கப்பல் காத்திருக்கவில்லை. அது தப்பிச் சென்றுவிட்டது!

அதனால் ஆஸ்திரேலிய அரசு செலுத்திய நஷ்டஈடு எவ்வளவு தெரியுமா? 62 லட்சத்து 50 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண் பணம் ரொக்கம்.

கன்னர் சாப்பிடுவதை இடை நிறுத்தி கப்பலை தடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தால் இவ்வளவு தொகையை அவரது அரசு மிச்சப்படுத்தியிருக்கும்.

## தொலைபேசி மூலம் எக்ஸ்-ரே படம்

### அனுப்ப புதியவழி கண்டுபிடிப்பு

தொலைபேசி மூலம் எக்ஸ்-ரே படங்களை அனுப்பும் வழிகண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சாதாரணமாக தொலைபேசி எண்களைச் சுழற்றுவதன் மூலம் உலகம் முழுவதும் எக்ஸ்-ரே படங்களை அனுப்ப முடியும்.

இந்த முறைக்கு 'இம்ட்ரான்' என்று பெயர் இடப்பட்டுள்ளது.

தென் மேற்கு இங்கிலாந்தில் வெற்றிகரமாக இம்முறை பரிட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது

தூர இடத்தில் உள்ள வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனையைச் சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ள இந்த முறை உதவுகிறது.

தரைமார்க்கமாக தொலைபேசி மூலம் அனுப்பப்படும் எக்ஸ்-ரே படத்தை டெலிவிஷனில் பார்த்து நிபுணர் ஆலோசனை வழங்குவார். மறு நிமிடம் அந்த ஆலோசனை கிடைத்து விடுகின்றது

படம் ஒலி அலைகளாக வழமையான தந்தித் தொடர்பு மூலம் செல்கிறது. பின்னர் டெலிவிஷனில் படமாக மாற்றப்படுகிறது.

30 வினாடிகளில் இவை இடம் பெறுகின்றன.

எக்ஸ்-ரே படங்களை வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெற மணித்தியாலங்கள் என்ன, நாட்கணக்கிலும் தாமதங்கள் ஏற்படலாம்.

ஆனால் தொலைபேசி முறைமூலம் சம்பந்தப்பட்ட நிபுணருக்கு எக்ஸ்-ரே படம் சில வினாடிகளில் போய்ச் சேர்ந்துவிடும்.

## விசுவாசத்துக்கு பரிசு பற்கள்

உங்கள் மனைவி விசுவாசமாக இருக்கவில்லை நேரத்திற்கு சமைத்துத் தரவில்லை என்று கோபப்படுகின்றீர்களா?

அதற்காக நீங்கள் உங்கள் மனைவியின் முன்பல்லை உடைத்தீர்களானால் அவ்வளவுதான்.

ஒன்று, நீங்கள் நீதிமன்றம் ஏறவேண்டிவரும் அல்லது மனைவி உங்களை விட்டே போய்விடுவாள்.

ஆனால் நியூ ஹெபிரிட்ஸ் நாட்டைச் சேர்ந்த நம்பா இனப் பெண்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல.

கணவன்மார் முன்வந்து தங்கள் முன்பற்களை எப்போது உடைப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்களாம்

தனது மனைவி மிகவும் விசுவாசமாக இருக்கின்றாள், கஷ்டப்பட்டு உழைக்கின்றாள் என்பதை நம்பா நாட்டு கணவன் எப்போது கண்டுபிடிக்கின்றானோ உடனே மனைவியின் இரண்டு முன்பற்களை உடைத்து விடுவானாம்

நம்பா இன பெண்கள் இந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்த கண்ணமே இருப்பார்கள்.

இல்லற ஒற்றுமை, பெருமை — இவற்றின் சின்னமாகவே நம்பா இனப் பெண்கள், முன்பல் உடைபடுதலை கணிக்கின்றார்கள்

## விசித்திரப் பெயர்

கென்யாவில் றுடோல்ப் ஏரியை ஒட்டிய தீவில் வாழ்ந்த ஒரு பழங்குடியின் பெயர் "99"

கடந்த 230 ஆண்டுகளாக இப்பழங்குடியினரின் எண்ணிக்கை 99. அத்தொகையே பழங்குடியினரின் பெயராகி விட்டது.

உணவுத் தட்டுப்பாட்டினால் அக் குடியினரின் தொகை அதிகரிப்பதில்லை. அதுபோல் குறைவதும் இல்லை.

### மூளைக்கு வேலை விடை

மூளைக்கு வேலை பகுதியில் கடந்த வாரம் தந்த புதிருக்கு விடை கண்டுபிடித்தீர்களா?

அந்த எண் — 2519.

## சாதனை நிறைந்த லண்டன் நூலகம்

உலக நூலகங்களில் சிறப்பானதோர் இடத்தை வகிக்கின்றது லண்டன் நூலகம்.

இந் நூலகத்தில் மொத்தம் 1 கோடி நூல்கள் வைக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் வெளியாகும் அத்தனை நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை இங்கு பார்க்கலாம் பிறநாடுகளில் வெளியாகும் நூல்களும் இங்கு இருக்கின்றன.

இந்த நூல் நிலையம் 18-ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது.

அச்சுக்கலை தொடங்கிய காலத்தில் முதல் அச்சு ஏறிய நூல் தொடக்கம் மிக அண்மைக்கால வெளியீடு வரை இங்கு இருக்கின்றன.

பிரிட்டனில் வெளிவரும் எந்த நூலும் சஞ்சிகையும் இந்த நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்பது சட்டம்.

சர்வதேச பரிவர்த்தனை திட்டத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வெளியீடுகளும் இங்கு அனுப்பிவைக்கப் படுகின்றன.

இங்குள்ள நூல்களை அலுமாரிகளில் அடுக்கி வைத்தால் 180 மைல் நீளத்துக்கு அலுமாரிகளே இருக்கும்.

சுமார் 250 மைல் தூரத்திற்கு அடுக்கிவைக்கக் கூடிய புத்தகங்களை "மைக்ரோ பிலிம்" மூலம் சுருக்கி வைத்திருக்கிறார்கள்.

இந்த பிலிம்களை சுமார் 4 பரிலாங்கு தூரத்திற்கான இடத்தை அடைத்துக் கொள்ளக் கூடியவை.

இதில் சுமார் 9 லட்சம் சஞ்சிகைகள், 2 லட்சம் செய்திப் பத்திரிகை பிரதிகள், 15 ஆயிரம் தேசப் படங்கள் ஆகியவை அடங்கும்

— புத்தொளி —

## பிரச்சினை தீர நூதன வழி

கிறீன்லந்து நாட்டில் உள்ள எஸ்கிமோர்கள், தங்களுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்க்க நூதன வழி ஒன்றைக் கடைப்பிடிக்கின்றனர்

ஒரு பாடல் முறைமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்றனர்.

அது எப்படி?

பிரச்சினைக்குரிய இருவரும், ஆளுக்கு ஒரு பாடலை இயற்ற வேண்டும். பாடல், அடுத்த ஆளை தாக்குவதாக, கிண்டலுடன் இருக்க வேண்டும்.


பொதுமக்கள் முன்னிலையில் இருவரும் பாடல்களைப் பாடவேண்டும். மக்கள் பாடலைக் கேட்டு யார் வெற்றி தோல்வி என்பதைத் தீர்மானிப்பார்கள்.

அவ்வளவுதான். இரண்டு பேருக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்ந்து விட்டது என்பதுதான் அர்த்தம்.

பாடல் போட்டியில் தோல்வி அடைந்தவர், பிரச்சினையை மறந்து விட்டு வெற்றி அடைந்தவருடன் இணக்கமாக போக வேண்டியதுதான்.

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 12



அனுப்புபவர் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

கையெழுத்து: ..............................

**இடமிருந்து வலம்:**

1. மறைந்த உலகப் பெருந்தலைவர் ஒருவரின் சுயசரிதம்
5. சேலை
7. கால எல்லை
9. உயிரின் முதலாவது உரு
10. மூன்று
11. இராமனுக்கு இலக்குவன்
13. இந்துமதத்தின் ஓர் உட்பிரிவு
15. பங்காளி
18. தவம்
19. கருவியை இப்படியும் சொல்லலாம்
21. சௌக்கியம்
22. குடிவகை ஒன்று
23. ஒருவகை சூது விளையாட்டு என்பர்

**மேலிருந்து கீழ்:**

1. தொடர்ந்து வருவது
2. வீட்டின் முன்பக்கத்தில் அநேகமாக இருக்கும்
3. வாழ்த்து
4. குறைத்துவிடு
6. மனநிறைவு
8. ஒழுங்கு முறையால் உருவாவது
11. பூவின் ஒரு அங்கம்
12. தந்தை
14. முகம்
16. இரத்தம்
17. இன்னொரு நாட்டிற்கு செல்வதற்குப் பெறும் அனுமதி
20. பெருக்கு
21. தன்னுடைய

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 12, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. தஷ்ரு–உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

**சொற்சிலம்பம் போட்டி இல. 10 வெற்றி பெற்றவர்கள் விவரம்:**

1 ஆம் பரிசு: திரு சி. சரவேஸ்வரசர்மா 96, அரசடி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு: க. சரஸ்வதி, உடையாமணல், வல்வெட்டித்துறை.

3 ஆம் பரிசு: செல்வி ஆர். கல்யாணி, பொற்கொடி வளவு, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

**சொற்சிலம்பம் இல. 10 விடைகள்**

இடமிருந்து வலம்:

1. இராமாயணம்
2. வித்தை
6. காவல்காரன்
9. சேரி 10. சிவ
11. பத்திரகாளி
13. மந்திரி 14 சுந்தரி
15. தரகு 17. பதம்
18. கரும்பு

மேலிருந்து கீழ்:

1. இதிகாசம்
2. மாமூல் 3. ரணம்
4. ரத்னவளி 7. வரி
8. காயத்திரி
10. சிகாமரம்
11. பந்தம் 12. [illegible]
13. மந்த 14 [illegible]
15. தரு 16 குபு

## செய்திக்கொத்து

(ஏப்ரல் 12 - 18)

**சனி:**

● அரசும் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும். மக்கள் கட்சி கோரிக்கை.

● இனப்பிரச்சினை: இந்திய அரசு உயர்குழு ஆய்வு.

● சங்கிலியன் புனர் வாழ்வு கழகத் தலைவர் கைது.

**ஞாயிறு:**

● இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை கொடுங்கள்; ராஜீவிடம் எம். ஜி. ஆர் வேண்டுகோள்.

● இனப்பிரச்சினைக்குத் தீர்வு இலங்கை முயற்சியில்தான் தங்கியுள்ளது–அமிர் பேச்சு.

**செவ்வாய்:**

● புதுவருடத்தன்றும் ஹெலிகொப்டர் தாக்குதல் வலிவடக்குப் பகுதிகளில்.

● வாகனேரியில் நிலக்கண்ணி; 3 சிப்பாய்கள் பலி

● இணைப்புச் சார்ந்த தீர்வையே இந்தியா வலியுறுத்துவதாகச் செய்தி

● லிபியா மீது அமெரிக்காவியானத் தாக்குதல்.

**புதன்:**

● பேச்சுப்பற்றி இந்தியக் கருத்து அறிந்த பின்னர்தான் முடிவு எடுப்போம்; உமாமகேஸ்வரன் அறிவிப்பு.

● பேச்சுநடத்த இம்முறைதான் இறுதிச் சந்தர்ப்பம்; இலங்கையிடம் இந்தியா விளக்கம்.

● சந்நிதி கோவிலுக்கு அருகில் துர்நாற்றம் வீசும் சடலங்கள் பற்றி அறிவிப்பு.

**வியாழன்:**

● யாழ் நகரில் 2 மணிநேரம் மோதல்; பொதுமக்கள் ஐவர் காயம்.

● நாவற்குழியில் இரண்டு நாள் தாக்குதல்; 2 குடிமக்கள் பலி.

[illegible]

[illegible] யாழ் நகரில் பேரணி.

## மக்கள் பணத்தை . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நகரங்களில் பிரபல விற்பனை நிலையங்களில் பொருள்கள் வாங்க இமெல்டா அனுமதிக்கப்பட்டாள். மணிலாவின் மேயராக நியமிக்கப்பட்டாள். மனித குடியிருப்புத்துறை அமைச்சராகவும் இமெல்டா நியமிக்கப்பட்டாள்.

தனது இரகசிய வாழ்க்கையைக் கண்டுபிடித்ததற்காக இவ்வளவையும் செய்து இமெல்டாவை 'தாஜா' செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளானார், மார்க்கோஸ்.

இது மக்களின் வரிப்பணத்தில் உல்லாச வாழ்க்கையை நடத்த இமெல்டாவுக்கு வாய்ப்பு அளித்தது.

ஆனால் இமெல்டாவின் இரகசிய வாழ்க்கை பற்றியும் தகவல்கள் வெளிவராமலில்லை.

இமெல்டாவின் காதல் வாழ்க்கைபற்றி பலவிதமான தகவல்கள் உலவத் தொடங்கிய காலம். 1984 இல் ஒரு நாள் மணிலா பத்திரிகை ஒன்றுக்கு இமெல்டா பேட்டி அளித்தார்.

அவளின் வாழ்வில் தொடர்புள்ள 'ஆண்கள் —காதலர்கள்' பற்றி கேள்வி கேட்கப்பட்டது;

'இரண்டாவது ஹென்றி போர்டின் மனைவி கிறிஸ்டினா போர்ட் என்னிடம் வந்து சென்றால் நான் தன்னைச் சேர்க்கையில் நாட்டம் கொண்டவள் என்று கூறுகிறார்கள்.

தனிமையில் சில இடங்களுக்குச் செல்வது துக்கமான விஷயம் ஜோர்ஜ் என்ற அழகனைத் துணைக்கு அழைத்துச் சென்றால் அவர் என் காதலர் என்று சொல்கிறார்கள்' — இப்படி இமெல்டா சொன்னார்.

இமெல்டாவின் காதல் தொடர்புகள் உறுதிப்படுத்தப்படவும் இல்லை. ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை.

மார்க்கோஸின் பின்னர் ஆட்சி தனது கைக்கு வரவேண்டும் என்று விரும்பியவர் இமெல்டா.

மாசேதுங் இறந்தவுடன் அவரின் விதவை ஜியாங் குயிங் பற்றி இமெல்டா பின்வருமாறு சொன்னார்:–

'விரைவாகச் செயற்பட்டு பதவியைப் பிடிக்க [illegible] விட்டாள்'—

ஆனால் இப்படிச் சொன்ன இமெல்டா வுக்கு என்ன நடந்தது?

பதவியை இழந்த கணவனுடன் பதறிப பதறிப் போய் அமெரிக்க விமானப்படை விமானம் ஒன்றில் ஏறி ஹவாய் போய்ச் சேர்ந்தாள் இமெல்டா.

'அரசி' என்று ஆட்சி புரிந்த இமெல்டாவின் உல்லாச வாழ்க்கை ஆகாசக் கோட்டையாகி விட்டது

மீண்டும் சுராஜ் வாழ்க்கை தானோ!

## புதிய...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்று நீங்கள் சிந்திக்கலாம். கம்பியூட்டர் செய்யும் அத்தனை வியக்கத்தக்க செயலுக்கும் காரணம் அதற்கு கட்டளைகளை கொடுக்கும் மனிதனின் திறமையே. எனவே அதன் செயல்களுக்குரிய பாராட்டுக்கள் அதற்கான கட்டளைகளைப்பவனுக்குரியது.

(தொடரும்)

## பெண்களுக்கு அதிக . . .

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நாவலை பெண்ணிலை வாதத்தினர் தொடாமல் இருக்க முடிவதில்லை. இந்த நாவலை எடுத்து மேற்கோள் காட்டுவோர், கதையில் வரும் பெண்பாத்திரத்துக்கு ஏற்படும் நிகழ்வு, அவளுடைய அறியாப் பருவத்தில் முதிர்ச்சியில்லா நிலையில் இடம்பெறுவதை உணர்வது அவசியம்.

இன்று யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் பல ஆண்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதால், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகின்றன.

முன்னரெல்லாம் இலங்கையின் வேறு பிரதேசங்களில் இருந்து வரும் காசுக்கட்டளைகளை நம்பியிருந்த நிலைமாறி பிறநாடுகளில் இருந்து கிடைக்கும் காசோலைகளை எதிர்பார்க்கும் சூழ்நிலை உருவாகிறது

இந்த நிலையில் பிறநாட்டில் வேலைபார்க்கும் ஆண்கள் ஊதியத்தை ஒழுங்காக அனுப்பாது விடுவதால் பெண்கள் கஷ்டப்படுவதாக பெண்ணிலை வாதத்துக்குச் சார்பாகக் கூறுவது ஏற்கமுடியாத கருத்தல்ல.

கடும் உழைப்பும், சிக்கனமும், குடும்பநலன்களில் கரிசனையாக இருப்பதும் யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் தனித்துவமான பண்பு என்பது நாமறிந்ததே

- சோ. பத்மநாதன் -

பெண்ணிலைவாதம் மேலைநாடுகளில் ஒரு புதியதுறையாக, கருத்துநிலையாக மலர்க்கான்கிறோம். இது விஞ்ஞானபூர்வமாக அங்கெல்லாம் ஆராயப்படுகிறது

பெண்ணிலைவாதம் தொடர்பாக சில்லறைச் சர்ச்சைகளை எழுப்பாமல், பிரச்சினைகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய நாம் முன்வரவேண்டும்.

-கலாநிதி சி. மௌனகுரு

## 20 ஆண்டு . . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவினை ஏற்றது.

அதனைத் தொடர்ந்த 7 உறுப்பினர்களைக் கொண்ட சான்றோர் குழுவின் சிறப்புத் தெரிவு பெற்ற நூல்களைப் பரிசுக்குரிய நூல்களாக அங்கீகரித்துள்ளது.

இந்த சான்றோர் குழுவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி அ. சண்முகதாஸ், திரு சி. தில்லைநாதன், திரு. இ. சிவகுருநாதன் (தினகரன் ஆசிரியர்) திரு ஆ. சிவநேசச்செல்வன் (வீரகேசரி ஆசிரியர்) திரு. கே. டானியல் ஆகிய எழுவர் அங்கம் வகிக்கின்றனர்.

நூல்கள் தெரிவுப் பணியில் பல்கலைக்கழகம் சார்ந்த முன் மூவரும் பணியினை ஏற்று நூல்களைத் தெரிவு செய்து உதவியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைத்துறை சார்ந்த பின்னவர் இருவரும் 7-வது உறுப்பினரான எழுத்தாளர் டானியலும் மௌனம்சாதித்து விட்டதாக இலக்கியப் பேரவையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

எனினும் சான்றோர் குழுத் தெரிவை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய ஆராய்ச்சிக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தனும் நாவலுக்கு செங்கை ஆழியானும் சிறுகதைத் தொகுக்கு செ. கதிர்காமநாதனும், கவிதைத் தொகுதிக்கு நீலாவணனும் காவியத்துக்கு மஹாகவியும் நாடகத்துக்கு செம்பியன் செல்வனும், சிறுவர் இலக்கியத்துக்கு த. துரைசிங்கம், பா. சத்தியசீலன் ஆகியோரும் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கவிஞர் செ. கதிரேசர் பிள்ளையும் கவிஞர் வே. ஐயாத்துரையும், பேராசிரியர் சு. வித்தியானந்தனால் இன்று பொன்னாடைபோர்த்துக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

யாழ். இலக்கிய வட்டம் இரு தசாப்தங்கள்—இல சிந்தனைகள் என்ற யாழ்வாணனின் நூலும் கல்வயல் வே. குமாரசாமியின் "மரணத்தின் நிழல்கள்" என்ற நூலும் இந்த விழாவில் வெளியிட்டு வைக்கப்படுகின்றன.

இலக்கிய வட்ட, இலக்கியப் பேரவையின் பணிகள் மேலும் மேம்பட்டு செழுமை பெற வேண்டும் என்று சஞ்சீவி சார்பில் விழைகின்றோம்.

**A/L 86**

**திங்கள் முதல்**

புதிய பகுதிகள்

7.30: தடை வடிவங்களில் இயக்கம், அலு

8 45 சிக்கல் எண்

10 30 சடத்துவ திருப்புதிறன்

11 45 திரிகோண கணிதம்

சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்கள்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

**எங்கள் தேவை**

தேவை

பாவித்து நல்ல நிலையிலுள்ள கலர் தொலைக் காட்சிப் பெட்டி விலைக்குத் தேவை. விளம்பர இலக்கம்:17, தேர்பா உதவி, த. பெ எண்: 23 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெற்றிவேற்கை
20 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி தமிழ், ஆங்கில
உரையுடன் கூடிய
வெற்றிவேற்கை
(நறுந்தொகை) ஒன்றைப் பெற்றுக்
கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

19 04.1986 சனிக்கிழமை



சிக்கன செலவிற்கு நுரைவளம் கூடிய
மில்க்வைற் பார் சோப்
வாங்கிப் பாவியுங்கள்.
விலை: ரூ. 13/- மட்டுமே.
2 மேலுறைகளை அனுப்பி அழகிய
விநாயகர் ஸ்ரிக்கர்
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


# 'உப்புச்சப்பு' இல்லாதது; அரசின் புதிய யோசனை

## தொண்டா சொன்ன பந்துக்கதையின் அர்த்தம்

'பந்து' ராஜீவின் பக்கம். 'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் தொண்டமான் சொல்லிவிட்டார்.

பேத்தியின் திருமணத்தில் கலந்துகொள்ளப் போன இடத்தில் பார்த்துப் பாராமல் இதைச் சொல்லியிருக்கமாட்டார்.

தமிழகத்துக்கு தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ளும்போது எல்லாம் 'தனி'ப்பட்ட கருத்துக்களை கூசாமல் கூற 70 வயதான திரு. தொண்டமான் தவறுவதில்லை.

என்ன அர்த்தத்தில் 'பந்து' ராஜீவின் பக்கம் என்று கூறினுரோ தெரியவில்லை.

ஆனால் நடக்கும் விஷயங்கள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கைகளில்தான் முடிவு தங்கியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது

பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண இதுதான் இறுதிச் சந்தர்ப்பம் என்று மட்டும் ராஜீவ் கூறப்போவது இல்லை.

இந்த அடிப்படையில் தீர்வு காணவும் என்று ஒரு திட்டத்தை இருதரப்பார் முன்னிலையிலும் அவர் வைப்பார்.

டில்லி அரசு வட்டாரங்கள் இதனைத் திடமாகத் தெரிவிக்கின்றன.

அப்படி என்றால் இலங்கை அரசின் புதிய யோசனைகள்?

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக—

அவர்கள் பகுதிகளில் அவர்கள் சுயகௌரவத்துடன் வாழக்கூடியதாக—

இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் (Unity and Integrity) பேணக்கூடிய விதத்தில் எழுத்துமூலம் புதிய யோசனைகளை இலங்கையிடமிருந்து இந்தியா கோரியிருந்தது.

ஆனால் இலங்கை சமர்ப்பித்த புதியயோசனையோ (Unitary System) ஒற்றையாட்சியை வலியுறுத்துவதுபோன்று அமைந்துள்ளது. இதனை டில்லி அரசு வட்டாரங்களே கூறிவிட்டன.

### 'உப்புச்சப்பு' இல்லாதது

இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேச ஆட்சிமுறையைத்தான் புதிய யோசனை கொண்டுள்ளதே ஒழிய இலங்கையின் அரசமைப்பில் எந்த அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்துவதாக இல்லை என்று டில்லி அரசு அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அது உண்மையில் ''உப்புச் சப்பு'' இல்லாததுதான்!

இந்தியாவில் 22 மாநில அரசுகள் உள்ளன. யூனியன் பிரதேசங்கள் என்று மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் சில பகுதிகள் உள்ளன.

பாண்டிச்சேரி, கோவா ஆகியன யூனியன் பிரதேசங்கள் ஆகும்.

இவை தங்களை முழு மாநில அந்தஸ்துள்ள அரசுகளாக்கும்படி மத்திய அரசைக் கேட்டு

**உள்ளும் புறமும் —குறுமுனி**

வருகின்றன. இது பற்றி சாதகமாகப் பரிசீலனை செய்வதாக மத்திய அரசு அறிவித்து உள்ளது.

இச்சூழ்நிலையில் யூனியன் பிரதேச அமைப்பை இலங்கை பிடித்துக் கொள்ளப்பார்க்கிறது

மாநில அரசுகளுக்கு சில விஷயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடமுடியாது அந்த விஷயங்கள் குறித்து மாநில சட்டசபை, சட்டங்களை நிறைவேற்ற, செயற்படுத்த பூரண அதிகாரம் பெற்றுள்ளது.

மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்களில் மாநிலம் தலையிட முடியாது.

மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஒதுக்கப்பட்ட விஷயங்களை விட வேறு சில விஷயங்கள் இரண்டுக்கும் பொதுவாக உள்ளன.

அந்த விஷயங்கள் குறித்து மாநில அரசு, சட்டங்களை மத்திய அரசின் அனுமதியுடன் நிறைவேற்றலாம் இல்லை மேல் மத்திய அரசின் நாடாளுமன்றம் அந்த விஷயங்கள் குறித்து தனித்துச் சட்டம் இயற்றலாம்.

இந்த அதிகாரப் பரவலாக்கல், யூனியன் பிரதேசத்துக்கு வழங்கப்படவில்லை. இந்திய அரசமைப்புச்சட்டத்தில் 246 ஆவது ஷரத்தின் 4 ஆவது பிரிவு யூனியன் பிரதேசஅமைப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது:

''யூனியன் பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும் மத்திய நாடாளுமன்றமும் சட்டம் இயற்ற முடியும்''

இந்திய அரசமைப்பில் உள்ள இந்த ஷரத்தை அப்படியே இலங்கை தனது புதிய யோசனைகளில் இணைத்துள்ளது

அப்படி என்றால் மாகாணசபை தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து சுதந்திரமாக இயங்கமுடியாது ஆளுவர்க்கத்தின் அபிலாஷைகளுக்கு முரணாக வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் சட்டசபைகள் சட்டங்களை இயற்றினால் அதனைச் செல்லுபடியற்றதாக்கக் கூடியதாக நாடாளுமன்றமும் சட்டம் இயற்றலாம்.

இப்படித்தான் தமிழர் வட்டாரங்களும் டில்லி அரசு வட்டாரங்களும் கருதுகின்றன.

நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்வையும் பலப்படுத்துவதாக புதிய யோசனைகள் அமையவில்லை. ஒற்றையாட்சி முறையை வேறொரு கோணத்தில் வலியுறுத்துவதாகவே புதிய யோசனைகள் அமைந்துள்ளன—

இந்த நிலையில்—

பேச்சுக்கள் மூலம் தீர்வு காண இறுதிச் சந்தர்ப்பம் இது என்று கூறும் இந்தியா,

இந்த அடிப்படையில் தீர்வு காணுங்கள் என்று கூறி ஒரு திட்டத்தை முன்வைக்கும் நிலைதான் ஏற்பட்டுள்ளது

ஆகவே பிரதமர் ராஜீவின் பக்கம்தான் 'பந்து' உள்ளது என்று திரு தொண்டமான் சொன்னது, அர்த்தபுஷ்டி நிறைந்தது என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

## சிறிமாவுக்கு கிடைத்த பிறந்தநாள் பரிசு

புத்தாண்டுப் பரிசாக ஜனாதிபதி குடியுரிமையை மீண்டும் வழங்கினுர்.

பிறந்த நாள் பரிசாக மக்கள் தேர்தல் வெற்றியை வழங்கினுர்கள்.

ஆம். சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு 1986 பிறந்த பின்னர் பரிசுகளாகவே கிடைத்து வருகின்றன.

ஏப்ரல் 17 அம்மையாரின் பிறந்த தினம். அக்மீமன இடைத்தேர்தலில் அம்மையாரின் சுதந்திரக்கட்சி மீண்டும் வெற்றியீட்டியது.

மீண்டும் குடியுரிமை கிடைத்த பின்னர் அம்மையார் உற்சாகத்துடன் கலந்து கொண்ட முதலாவது இடைத்தேர்தல் இதுவாகும்.

பொதுத் தேர்தல்தான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான 'சர்வரோக நிவாரணி' என்று மேடைக்கு மேடை, அறிக்கைக்கு அறிக்கை கூறிவரும் திருமதி பண்டாரநாயக்காவுக்கு அக்மீமன தேர்தல் முடிவு இன்னும் ஊக்கத்தைக் கொடுத்துள்ளது.

எப்படியாவது அக்மீமன தொகுதியைப் பிடித்து விடவேண்டும் என்று ஆளும்கட்சியும் சுதந்திரக் கட்சியும் பந்தயம் பிடித்து வேலை செய்தன. இறுதியில் சுதந்திரக் கட்சியே வென்றது.

யு என்.பிக்குப்போடப்படும் ஒவ்வொரு வாக்கும் தீவிரவாதிகளைப் பலவீனப்படுத்தும் வாக்கு ஆகும் என்று ஜனாதிபதி தொடக்கம் பிரதமர் வரை பேசினுர்கள்.

தீவிரவாதிகளுக்குத் தாலாட்டுப் பாடுவதில் தான் யு.என்.பி. அரசு ஈடுபட்டுள்ளது என்று குரல் எழுப்பினுர் அம்மையாரின் மகனும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அநுரா பண்டாரநாயக்கா. பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று மக்கள் அளித்த தீர்ப்பு இது என்று சுதந்திரக்கட்சி நிச்சயம் கூறும்.

அம்மையாரின் 'இமேஜ்' மக்கள் மத்தியில் இருந்து இன்னும் அகலவில்லை என்று அரசுக்கு எதிரானவர்கள் கூறுவர். புது டில்லிக்கு அனுப்பப்பட்ட புது யோசனை தான் கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டது என்று அரசில் உள்ள கடும்போக்குக் கொண்டவர்கள் கூறக்கூடும்.

இந்த நிலையில் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண அனுப்பப்பட்ட புதிய யோசனை, 'பழையபடி வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிய நிலையை. அடைந்து விடுமோ?

இப்படி அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

**தமிழர்களி . . .**


(1 ம் பக்கத் தொடர்ச்சி)


எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும்.

தீவிரவாதிகள் உட்பட தமிழர் தரப்பினர் அனைவரும் விரும்பினுல் அவர்களுக்கு எம் பி பதவிகள் கிடைக்க நான் வழி செய்து கொடுப்பேன்

அரசமைப்புச் சட்டத்தின் 6ஆவது திருத்தத்தை திருத்துவதற்கு நான் அரசாங்கத்தை நெருக்குதல் செய்வேன்.

தமிழர் பிரதிநிதிகள் மீண்டும் நாடாளுமன்றம் சென்றுல் தான் தங்கள் தனித் தன்மையைப் பெறுவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் நாடாளுமன்றம் செல்ல விரும்புகிறது.

சகல கட்சிகளும் அடங்கிய தேசிய அரசு நிறுவப்பட வேண்டும் என்பது பற்றிய திரு. ஜெயவர்த்தனுவின் 6 பக்க அறிக்கையை, இலங்கையர் என்ற முறையில் தனிப்பட்ட ரீதியில் நான் ஆதரிக்கிறேன்.

இப்படி திரு. தொண்டமான் சொன்னுர்

## 'அவர்' ஒன்று நினைக்க 'இவர்' ஒன்றைச் செய்தார்!

78 வயதுக்காரர், 85 வயதானவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போகிறாராம்.

அந்த நாளை கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றன.

சட்டசபை உறுப்பினர்களாக பதவி வகித்தவர்களில் உயிருடன் இருப்பவர்கள் இரண்டு பேர்.

ஒருவர், 78 வயதான ஜனுதிபதி ஜெயவர்த்தன.

மற்றவர் 85 வயதான காலி எம் பி டாக்டர் தஹநாயக்கா.

ஒழுங்கு நடவடிக்கை என்பது தஹநாயக்காவுக்கு தண்ணீர் பட்டபாடு.

ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியிலே உறுப்பினராக இருந்தார் தஹநாயக்கா.

1954 இல் பிரதமர் டட்லி சேனநாயக்கா காலி சென்றுர். தஹநாயக்கா மாலை சூட்டி அவரை வரவேற்றுர்.

அதற்காக சமசமாஜக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார் தஹநாயக்கா.

அக்மீமனையை வெல்வதற்காக அமைச்சராக்கப்பட்டவர் தஹநாயக்கா.

''1977 இல் என்னைத் தோற்கடித்த அல்பர்ட் சில்வாவை ஆதரித்து எந்த முகத்துடன் நான் பேசுவேன்?''— கடிதம் எழுதி விட்ட அக்மீமன பக்கமே காட்டாமல் இருந்து விட்டார் அவர்.

அவர் (ஜனுதிபதி) நினைக்க இவர் (தஹநாயக்கா) இன்னென்றைச் செய்துவிட்டார்.

அக்மீமன சுதந்திரக் கட்சி வசம்போய் விட்டது

நிச்சயம் அமைச்சர் பதவியும் டாக்டர் தஹநாயக்காவிடம் இருந்து பறிபோய் விடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

முதியவர் சண்டை எங்கு போய் நிற்கப் போகின்றதோ?

### பிரஜைகள் குழு பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் 2 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் (இன்று) சனிக்கிழமை புலோலி பசுபதீஸ்வரர் ஆலய பரிவதவர்த்தனி கலா மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்

### விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

குராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தினரின் இல்லங்களுக்கு இடையேயான 6 ஆவது விளையாட்டுப் போட்டி ... வில் நடைபெறும்.

# இஸ்ரவேலின் அழிவு பாதையில் ரேகன்!

## லிபியா மீதான தாக்குதல் பெரும் அடாவடித்தனம்

லிபியாவின் தலைநகரான திரிபோலி மீதும் இரண்டாவது பெரிய நகரான பென்காசி மீதும் கடந்த செவ்வாய் அதிகாலை அமெரிக்கவிமானங்கள் குண்டுமாரி பொழிந்தன

இந்தச் சம்பவத்தில் 15க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்

கொல்லப்பட்டவர்களில் லிபியத் தலைவர் முவாம்மர் கடாபியின் 15 மாதம் நிரம்பிய வளர்ப்பு மகளும் ஒருவர். கடாபி தம்பதியினர் கடந்த வருடம் இந்தக் குழந்தையை தத்து எடுத்தனர் காயம் அடைந்தவர்களில் கடாபியின் 3 வயது, 4 வயது மகன்மாரும் அடங்குகின்றனர்.

கடாபியின் வாசஸ்தலம் உட்பட முக்கிய இடங்களைக் குறிவைத்து அமெரிக்கத் தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது

இரண்டு தடவை பறந்து வந்து 30க்கு அதிகமான அமெரிக்க விமானங்கள் நடத்திய இத்தாக்குதலில் அதி சக்தி வாய்ந்த குண்டுகள்பயன் படுத்தப்பட்டிருக்கின்றன குண்டு விழுந்த பகுதிகளில் கட்டடங்கள் தரைமட்டமாகின.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று கூறிக் கொண்டு அமெரிக்கா நடத்திய தாக்குதல் இது.

கிரெனடா மீதான படை எடுப்புக்குப் பின்னர் ரேகன் நிர்வாகம் மேற்கொண்ட ஆகப் பெரிய போர் நடவடிக்கை இது ஆகும்.

1969 ஆம் ஆண்டுமுதல் லிபியாவின் ஒப்பற்ற தலைவராக இருந்து வருபவர் முவாம்மர் கடாபி. விமானத் தாக்குதலில் சிலர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

விமானத் தாக்குதலில் இறந்திருக்கலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தை வேகப்படுத்தும்படி அவர் டெலிவிஷனில் தோன்றி நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தனது தற்கொலைப் படைகள் உலகெங்கும் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் என்று அவர் அறிவித்ததை அடுத்து அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன.

ஜனுதிபதி ரேகனுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் என்றுமில்லாதவாறு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஒருநாட்டின்சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் ஊறு விளைவிக்கும் விதத்தில் அமெரிக்கா இத்தாக்குதலை நடத்தி இருக்கிறது இது சர்வதேச சமாதானத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஆகும்.

101 நாடுகள் அங்கம் வகிக்கும் புதுடில்லி அணிசேரா நாடுகள் அமைச்சர்கள் மாநாடு உட்பட பெரும்பாலான உலகநாடுகள் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளன

சர்வதேச அரங்கில் ஏற்கனவே இருந்துவந்த பதற்றத்தை அமெரிக்க நடவடிக்கை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

லிபியத்தாக்குதலைக் காரணம் காட்டி ரேகன்—கோர்பச்சேவ் உச்சிப் பேச்சுக்கு முன்னேடியாக நடைபெற இருந்த அமெரிக்க—ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பை ரஷ்யா ஒத்தி வைத்துவிட்டது.

லிபியா மீண்டும் தாக்கப்படுவதைத் தடுக்கும் முயற்சியாக பிரச்சினைக்குரிய சித்ரே வளைகுடா பகுதிக்கு ரஷ்யா தனது போர்க் கப்பல்களை நகர்த்தி இருக்கிறது.

மத்தியதரைக் கடலில் லிபியாவின் நுழைவாயில் சித்ரே வளைகுடா ... லிபியா உரிமை கோருகிறது.

இதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது கடந்த மாத இறுதியில் அமெரிக்காவும் — லிபியாவும் மோத இது வழி வகுத்திருந்தது.

இம்மோதல் நடந்து 3 வார காலத்தில் தற்போது இரண்டாவது மோதல்நடந்திருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இரண்டாவது மோதல் பிரிட்டனையும்சிக்கலில் மாட்டிவிட்டிருக்கிறது

10 லட்சம் குடிசனங்களைக் கொண்ட திரிபோலி நகர் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ''எப்111'' ரக விமானங்கள் பிரிட்டனில் உள்ள தளத்தில் இருந்து பறந்து வந்தன.

இதனைத் தவிர மத்தியதரைக் கடலில் நிலை கொண்டிருக்கும் அமெரிக்காவின் 6 வது கடற்படையைச்சேர்ந்த விமானங்களும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன பென்காசி நகரம் மீதான தாக்குதலுக்கே இந்த விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

6வது கடற்படையில் 80 யுத்தக்கப்பல்களும் 170 யுத்தவிமானங்களும் உள்ளன. 20 ஆயிரம் அமெரிக்கவீரர்கள் தங்கி உள்ளனர்.

மத்தியகிழக்கிக்நெருக்கடி நிலவும் பகுதிகளில் தனது நலன்களைப் பாதுகாப்பதற்காக நீண்டகாலமாக அமெரிக்கா தனது 6ஆவது கடற்படையைப்பாவித்து வருகிறது.

### மத்திய கிழக்கின் விசர் நாய்

கடந்த 5ஆம் திகதி நடந்த சம்பவம் ஒன்றே அமெரிக்கா நிர்வாகத்துக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தி தாக்குதலுக்கு வழி வகுத்தது எனலாம்.

மேற்கு பெர்லினில் உள்ள இரவு விடுதி ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் அமெரிக்க சிப்பாய் ஒருவரும் துருக்கிய பெண் ஒருவரும் கொல்லப்பட்டனர். சுமார் 50 அமெரிக்கர்கள் உட்பட 230க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர் இச்சம்பவத்துக்கு லிபியாவை அமெரிக்கா குற்றம் சாட்டியது.

''மத்திய கிழக்கின் விசர் நாய்'' என்று லிபியத் தலைவரை ஏசும் அளவுக்கு இந்தச் சம்பவம் ஜனுதிபதி ரேகனைச் சினம் கொள்ளச் செய்திருந்தது.

1979 ஆம் ஆண்டு சியா ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்ட சுல்பிகார் அலி பூட்டோ முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில் இந்தியாவை 'இந்திய நாய்கள்' என்று ஐ நா.வில் வர்ணித்திருந்தார்

ஆனால் எந்த நாட்டுத் தலைவரும் மற்றொரு நாட்டுத் தலைவரை ''நாய்'' என்று இதுவரை வர்ணித்தது இடையாது.

கிறீஸுக்கு மேலால் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானம் ஒன்றில் சமீபத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு—

பிரான்ஸில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் விசாவுக்குக் காத்திருந்த அமெரிக்கர்கள் மீது கிரனைட் வீச்சு நடத்தவும் சிறு ஆயுதங்கள் கொண்டு அவர்கள்மீது தாக்குதல் நடத்தவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சி—

வடஆபிரிக்காவில் உள்ள கார்ட்டுமில் (சூடானின் தலைநகர், உள்ள அமெரிக்கத் தூதரகத்தை தகர்க்கவும்) அமெரிக்கத் தூதுவரை கடத்தவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சி—ஆகியவை அமெரிக்க ஜனுதிபதியை மேலும் சினப்படுத்தி இருந்தன.

### பிரிட்டனின் பங்கு

அமெரிக்காவின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் இன்று பக்கபலமாக இருந்துவரும் நாடுகளில் பிரிட்டன் முதலிடம் வகிக்கிறது.

1984 ஆம் ஆண்டு லண்டனில் உள்ள லிபியத் தூதரகத்துக்குள் வைத்து பிரிட்டிஷ் பெண் பொலிஸ் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் முதல் பிரிட்டிஷ்—லிபிய உறவுகள் கீழ் மட்டத்திலேயே இருந்து வந்தன.

எனினும் திரிபோலி நகரைத் தாக்கிய ''எப் 111'' ரக விமானங்கள் பிரிட்டனில் உள்ள தளத்தில் இருந்து பறந்து செல்ல இரும்புச் சீமாட்டி திருமதி மார்கிரட் தட்சர் அனுமதி அளித்தது ஒரு துணிச்சலான நடவடிக்கையே.

75 அடி நீளமான 'எப் 111 ரக குண்டு வீச்சு விமானங்கள் சுப்பர் சோனிக் வேகத்தில் 3000 மைல் வரை தொடர்ந்து பறக்கக்கூடியவை. பறந்து கொண்டிருக்கும் போதே நடுவானில் வைத்து மற்றொரு விமானம் மூலம் எரிபொருளைப் பெறக்கூடியவை. ஒரே சமயத்தில் 25 ஆயிரம் இருத்தல் பாரம் உள்ள குண்டுகளையும், ஏவுகணைகளையும் இந்த விமானங்கள் எடுத்துச் செல்லக் கூடியவை.

### கடாபி பதிலடி

44 வயது நிரம்பிய முவாம்மர் கடாபி அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடியாக இரு நடவடிக்கைகளை எடுத்தார்.

ஒன்று இத்தாலியின் சிசிலிக்கு அருகில் உள்ள லொமிடோசா தீவை நோக்கி லிபியா ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை நடத்தியது. அத்தீவில் இருந்து வரும் அமெரிக்க கரையோர பாதுகாவல் படையினருக்கு சேதம் விளைவிப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

லிபியாவுக்கு ஆகச் சமீபமாக உள்ள நேட்டோ அங்கத்துவ நாடான இத்தாலி இத்தாக்குதல் தொடர்பாக லிபியாவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தும்படி 13 நாடுகள் அங்கம் வகிக்கும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனத்தையும் (ஒபெக்) லிபியா கோரி உள்ளது.

இந்த நாடுகளிடம் இருந்து அமெரிக்கா 45 சதவீத எண்ணெயைக் கொள்வனவு செய்து வருகின்றபோதிலும் லிபியாவின் கோரிக்கைக்கு எல்லா நாடுகளும் செவிசாய்க்குமா? என்பது சந்தேகமே.

இன்று உலக எண்ணெய் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் சவூதி அரேபியா, அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடு.

சர்வதேச அரங்கில் தற்போது நடைபெற்று வரும் சம்பவங்கள் சர்வதேச சங்கத்தைப் போன்று ஐக்கிய நாடுகள் சபையும் செயல் இழந்து போகுமா என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன.

இதுவரை இஸ்ரவேலே இப்படியான அழிவு வேலைகளில் ஈடுபட்டு வந்தது. தற்போது அமெரிக்காவும் அதே பாதையில் செல்கிறது போல் தெரிகிறது.

அமெரிக்க நடவடிக்கை சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் தன் மதிப்பை நிச்சயமாகக் குறைக்கும்.

**உலக உலா**

**என்.பி.சீலன்**

### கருத்துக் கலசம் . .


1ம் பக்கத் தொடர்ச்சி


மன்றங்களை இயக்க வேண்டும் — வளர்க்க வேண்டும். இரு ஆண்டுகள் ஓர் இலக்கிய மன்றம் தொடர்ந்து இயங்கி வருவது என்பது பெரும் சாதனை! சபாஷ் போட்டுப் பாராட்டலாம்!!

அது மட்டுமல்ல — யாழ் இலக்கிய வட்டம் செய்த, செய்து வரும் பணிகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெருந் துணையாக நிற்கின்றன.

(அவற்றைப் பிறிதொரு பக்கத்தில் கட்டுரை வடிவில் விவரித்திருக்கிறோம்.)

நமது நாட்டிற்கேற்ற தனிவழியுடன், பொதுவாகத் தமிழின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு செயற்பட்டுத் தாண்டுவதும் யாழ் இலக்கிய வட்டத்தின் குறிக்கோளாக இருக்கிறது

இலக்கியத்தை இலட்சியமாகக் கொண்டு யாழ் இலக்கிய வட்டம் மேன்மேலும் எமது மொழிக்கும் அதன் மூலம் எமது மண்ணுக்கும் பணி புரியவேண்டும் என விரும்புகிறோம்; வாழ்த்துகிறோம்.

### புது விமானம்

பலாலி, ஏப்.19

நேற்று பலாலி விமான நிலையத்தில் இருந்து புதுவகையான சத்தத்துடன் புதுவித விமானம் ஒன்று குரும்பசிட்டி, வயாவிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளுக்கு மேலாக பறந்து சென்றது.


அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியீட்டு திகதி 19-04-1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org